உ

பரமபதிதுணை.

# பெரிய
# விவேகசிந்தாமணி.

இஃது

மதுரை வித்வான்

## மு. திருமலைமுத்துப்பிள்ளை

அவர்களால் சீர்திருத்தஞ்செய்து

இதன் விலை அணா 4.

மதுரை வடக்குமாசிவீதி

## இ. ராம. குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை ஸ்ரீ ராமச்சந்திரவிலாஸ அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

பரமபதிதுணை.

# முகவுரை.

---

### ஆசிரியப்பா.

மலர்தலை யுலகிற் பலவா யுதித்த
இடப்பிற வியுண்மா னிடப்பிற வியரி
தேயதிற் புருட ராயுதிப் பதுமா
வரிதென வான்றோர் பரிவொடு பகர்வர்
அப்படிப் பிறந்தோ ரிப்படி மிசைதம்
மிளமைப் பருவத் தளவிலா வுலக
வியற்கையுஞ் செம்மை பயக்குமுன் னூலி
லறிவினை விளக்கு நெறிமிகு நூலும்
நவமுறக் கற்ற லவசிய மென்றே
தேன்மொழி வித்து வான்களான் முன்னர்
மால்கொளச் செய்த நூல்பல வற்றுள்
தெள்ளிதில் வழங்கு மொள்ளிய விவேக
சிந்தா மணியெனு நந்தா மணிநூல்
வடிவினிற் சிறிதும் முடிவிலாக் கவிக
ளதிகமு மில்லா விதமுநன் குணார்ந்த
சதுரையே பொருவு மதுரையி லுறைவோன்
பொதுவரின் குலத்தான் விதுமுக நலத்தான்
வித்தகம் பயிலும் புத்தகக் கடையின்

விற்பனை புரிவோன் விற்பனந் தெரிவோன்
தருசா மியத்தான் குருசா மிக்கோன்
எனுங்கன முள்ளா னெனையிந் நூலைப்
பெரிதாய்த் தொகுத்துத் தருகவென் றுரைக்க
அக்கருத் தேற்ப மிக்குரித் தாக
முன்னையி லும்பெரி தென்னவக் கவிக
ளொடுபல புராணம் நடுகடை முதலாஞ்
சங்கநூல் நீதி தங்குநூல் களினுங்
குறிப்பிட் டதாகப் பொறுக்கி யெடுத்துத்
தொகுத்ததி கார மிருத்திடப் பிரித்துப்
பண்பா யளித்தன னண்பா விதனைப்
பொதுநன் மையைக்க ருதியச் சிலிட்டு
வெளியிட் டனரா லிளைமையோர் முதியோர்
வாங்கி வாசித்து மகிழ்வுறு வண்ணங்
கேட்டுக் கொள்ளு கின்றனன் றானே.

---

இங்ஙனம் வித்துவான்,
மு. திருமலைமுத்துப்பிள்ளை,
மேலமாசிவீதி, மதுரை.

உ

பரமபதிதுணை.

# விவேக சிந்தாமணி.

## கடவுள் வணக்கம்.

அல்லல்போம் வல்வினைபோ மன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துண் மேவுங்
கணபதியைக் கைதொழுதக் கால்.

பெருங்கருணைக் கடறதும்பித் திருவுருவந் தரித்துப் பேசருமா சான்மறைந்த வாருயிரை யெடுத்தே, யிருப்புகழ்ச் சேர் விஞ்ஞான கலராதி மூவ ரெனத்தொகுத்துத் தனுவாதி யீந்துமும்மா யையினில், வருஞ்சகலர்க் கிருவினையொப் பாக்கிமல பாகம் வருவித்துத் திருவடிக்கீழ் வைப்பான் மன்றதனு, ளருங்கருணை யைந்தொழிற்கூத் தாடுமிறை யடிக ளககமலத் தொளிவளரக் கருதியிருத் திடுவாம்.

## மழைச் சிறப்பு.

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை தவமும்
அரசிலா ரில்வழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில். (௧)

வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
காதல் கற்புடை கன்னியர்க் கோர்மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே. (உ)

மழை இன்மைக்குக் காரணம்.

அரிசி விற்றிடு மந்தணர்க் கோர்மழை
வரிசை தப்பிய மன்னருக் கோர்மழை
புருட னைக்கொன்ற பூவையர்க் கோர்மழை
வருட மூன்று மழையெனத் தூறுமே. (௩)

உழவுச் சிறப்பு.

அலகிலா மறைவிளங்கு மந்தணரா குதிவிளங்கும்
பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாந் திருவிளங்கு மழைவிளங்கு மனுவிளங்கு
முலகெலா மொழிவிளங்கு முழவருழு முழவாலே. (௪

ஞானிகள் பெருமை.

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான். (௫)

சோரமனை யாட்டிமிகச் சோரபிரான் மேன்மனதாய்ச்
சேரத் தொழிற்செய்யுந் திட்டம்போல்—பேர்பெரிய
ரத்தனடி மேன்மனத்தை யாளுது வைத்துகந்தே
யெத்தொழிலுஞ் செய்வ ரிசைந்து. (௬)

அரியணையி லிருந்துலக வரசாட்சி புரிந்தாலு மங்கை யேற்றுத், தெருவுதொறுந் திரிந்திரந்து தின்றாலு மிளம்பருவத் தெரிவை மாரைப், பிரியாம லிருந்தாலும் பிரிந்துதவம் புரிந்தாலும் பேசிற் றெல்லாம், விரிசீவ முத்தனுக்குக் குடம் பாடே யன்றியொன்றும் விரோத மின்றே. (எ)

மண்போற் பொறுமை யுடையோரு மதிபோற் சாந்த முடையோரும், புண்போ லுடலைப் புனைந்தோரும் புனல் போ லொழுக்கம் பூண்டோருங், கண்போ லிரக்க முடையோருங் கனல்போற் புசிக்குங் கதியோரும், விண்போ லறிவை யறிந்தோரும் பிறவா ரிந்த மேதினிக்கே. (அ)

இந்திரியக் குஞ்சரத்தை ஞான விருங்கயிற்றாற்
சிந்தனைத்தூண் பூட்டித் திகைபெறவே—பந்திப்பா
ரிம்மைப் பயனு மினிச்செறற் கதிப்பயனுந்
தம்மைத் தலைப்படுத்து வார். (௯)

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சைக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே.

பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம் புத்திவிசா ரித்தறியும் பொலிவதனு லரவாந், தன்போல விலையெனலா லகங்கார மதமாந் தனைநிகராஞ் சித்தமொரு தன்மையினு லயாம், மின்போலுஞ் சலனமன மசையாம லிறுத்தி விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட் பால்விடுத்து

வன்போடு வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால் வைத்தவிடத் திருந்து சித்த மகத்துவமுந் தருமே. (௰௧)

## இல்லறம்.

பிரம சாரி வனத்துறைவோன் பேணுந் துறவி தென்புலத்தோர், குரவர் தேவர் விருந்தொக்கல் கோக்கண் மறையோ ரிறந்தோர்கள், இரவ லாள ருறுப்பிலர்க ளெய்தும் பிணியா ளர்முதியோர், விரவு பாலர் சிசுதமது மிசையோ ரிவரை யோம்புகவே. (௰௨)

உரம்பெறு பிரம சரிவனத் துறைவோ ருலகினைத் தையுமற நீத்தோர், பரம்பரன் றெனுது புலத்தவர் விருந்து பசையுடை யொக்கன்மன் றுறந்தோ, ரரம்புசெ யிலம்பாட் டினரிறந் தாரென் றையிரு வரையுநன் கோம்பி, வரம்பெறு தமைப்பி னோம்புந ரல்லா தவர்மனை யறத்தவ ணிலரே. (௰௩)

## கற்பு.

கற்புடைய பெண்ணமிர்தங் கற்றடங்கி னனமிர்தம்
நற்புடைய நாடமிர்தந் நாட்டுக்கு—நற்புடைய
மேகமே சேருகொடி வேந்தமிர்து சேவகனு
மாகவே செய்யி னமிர்து. (௰௪)

சிறுகாலை யட்டில்புக லருந்தியுறச் சமைத்தல் சுவை திருத்தி யூட்டன், மறுகாலை யெண்ணாது விருந்தழைத்தன் மகப்பெறுதன் மடநா ணச்சம், பெறுகாலை யின்புறுதன் முன் னுறங்கப் பின்னுறங்கல் பின்னெழாத, வுறுகாலை தொழு தெழுதல் பன்னிரண்டுங் கற்புடையார்க் குரிய செய்கை. (௰௫)

## கற்பின்மை.

அடுத்தமனை தொறுந்திரிவாள் கணவனுணு முனமுண் பாளடக்க மில்லாள், கடுத்தமொழி பேசிடுவாள் சிறுதனந்தே டுவெளிவனைக் கலந்து வாழ்த, லெடுத்தவிடைக் கொடியாரே தண்டலையா ரேயெவர்க்கு மின்பமாமோ, குடித்தனமே செயவேண்டிப் பிடாரிதனைப் பெண்டுவைத்துக் கொண்ட தாமே. (௰௬)

பண்டோராண் பெண்ணமைத்தவ் விருவருக்கு மண மியற்றிப் பரனி ரக்கங், கொண்டளித்த முறைகடந்து கள்ள வழிப் புணர்ச்சிசெயுங் கொடியோர் தம்மை, மண்டலமே வாய்பிளந்து விழுங்காயோ வவர்தலைமேல் வானுலாவுங், கொண்டலே பேரிடியை வீழ்த்தாயோ வினைசெயிற் குற்ற முண்டோ. (௰௭)

மற்றொரு வனைச்சேர் மாதிறந் தானும் வசைநிற்கு முல கமுள் ளளவுஞ், சுற்றமும் வாழ்வுந் துணையுமே நீங்குஞ் சோரநா யகனுமே மதியான், பெற்றசுந் ததியு மிழிவுறு மாண்ட பின்னுறுங் கொடுவெரி நாகஞ், சற்றுநே ரங்கொள் சுகத்தினால் விளையுந் தன்மையி தரிவையி ருணர்வீர். (௰௮)

ஒருவரு மறிகிலா ரெனவொ ரொண்ணுதல்
கரவினிற் குமரரைக் கலத்தல் பூசைதன்
னிருவிழி மூடிமற் றெவர்கள் பார்வையுந்
தெரிகிலா தெனப்பயன் றிருட லொக்குமே. (௰௯)

வண்டுக ளிருந்திடின் மதுவை யுண்டிடுந்
தண்டமி ழிருந்திடிற் சங்கஞ் சேர்ந்திடுங்
குண்டுணி யிருந்திடிற் கோள்கண் மிஞ்சிடும்
பெண்டுக ளிருந்திடிற் பெரிய சண்டையே. (௨௰)

தன்னுரை கொளாதமனை வாழ்க்கையது தன்னின்
வெந்நிரயம் வீழ்வகை யேவிழுமி தம்மா
அன்னமொடு மேவியம ராடவர் தமக்குப்
பின்னுமொரு கூற்றமுள தோபிணியு முண்டோ. (௨௧)

எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
அட்டிற் புகாதா ளரும்பிணி—யட்டதனை
யுண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை. (௨௨)

வாழ்க்கைத் துணை நலம்.

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் றவசி—கொடிதொரீஇ
நல்லவை செய்வா னரசனிம் மூவரே
பெய்யெனப் பெய்யு மழை. (௨௩)

ஆனை யுரித்து மதடனைப் போர்த்திட் டடியும்பட்டு
டமான மழிந்தங் கிரந்தே திரிந்த மதுரைச்சொக்கர்
ஞான மிகப்பெற்று வாழ்வதெல் லாஞ்சொக்க நாயகியாள்
பானை பிடித்த முகூர்த்தத்தி னல்வந்த பாக்கியமே. (௨௪)

நாடு மூரு நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்யெனப் பெய்தலும்

கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடு சால்மிகு பத்தினிக் காவதே. (உ௫)

அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும் - வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண். (உ௬)

மக்கட்பேறு.

கங்குலின் மதியி லங்குங் கதித்திடும் பகற்கா லத்தில்
செங்கதிர் விளங்கு மன்றிச் சிறந்திடு மூலக மூன்றும்
பொங்கிய தன்மத் தாலே போனது விளங்கு மென்றும்
வங்கிசம் விளங்கு நல்ல மகவினாற் றானு மன்றே. (உ௭)

உந்து நீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே
வந்து தாடொழு மரசியல் வளமெலாம் பெறினு
மிந்தி ராதியர் பெரும்பதத் திருக்கையெய் திடினும்
மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே. (உ௮)

மைந்தனைப் பெறு கின்றதும் மாசிலாப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டபி றம்முறைக் கேற்பன
வந்த மில்கட னாற்றுதற் கேயன்றோ. (உ௯)

இறைவர் ஞானமு மேதமி லாமையும்
பொறையும் பூண்ட புதல்வர் பெறுவரேல்
மறவ ரேனு மவரையவ் வல்வினை
பிறவி யேழினும் பின்றொட ராதரோ. (௩௰)

### மக்கட்குத் தந்தையே நலம்.

தீதுநன் கறிகிலாச் சேய ரென்செய்வர்
சோதற வவரைநன் னெறியிற் கூட்டிடா
தேதங்க ளவர்முன்செய் திழிவைக் கற்பிக்குந்
தாதைதாய் புதல்வர்க்குச் சத்து ருக்களே. (௩௧)

மாவீறு விருவரும் மருவி மாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பி யாதுயர்
தாலமேற் செல்வமா வளர்த்த றங்கட்கோர்
காலனை வளர்க்கின்ற காட்சி போலுமால். (௩௨)

### காமக்கொடுமை.

ஊருளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகும்—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும். (௩௩)

அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும். (௩௪)

பைந்தொடியா ராசைநோய் கம்பீர மனிதரையும் பதுமந் தன்னை, முந்திரவி கதிர்போல மிளிர்விக்குஞ் சனவிடியு முனைக்கூர் வாளும், வெந்தவிருப் புப்பொறியு மெனக்கொடிய மனவேட்கை மேரு வொத்த, சுந்தரஞா னியர்தீரர் சூரரையெல் லாமிளைப்பிற் றுரும்பு செய்யும். (௩௫)

அஞ்சனவை வேற்க ணரிவையர்தம் பேராசை
நெஞ்சு புகின்றொருவர் நீங்கு நிலைமைத்தோ
வெஞ்சல்புரி யாதுயிரை யெந்நாளு மீர்ந்திடுமோ
னஞ்சமினி தம்மவோ நாளு நலியாதே. (௩௬)

தீமை யுள்ளன யாவையுந் தந்திடுஞ் சிறப்புந்
தோமில் செல்வமுங் கெடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கு
மேம நன்னெறி தடுத்திரு ளுய்த்திடு மிதனால்
காம மன்றியே யொருபகை யுண்டுகொல் கருதில். (௩௭)

நன்றியைக் கோறலு நலனைக் கோறலும்
வென்றியைக் கோறலும் விவேகங் கோறலுந்
துன்றிய வொக்கலைத் துறந்து நிற்றலுங்
கன்றிய காமத்தி னன்றி யில்லையே. (௩௮)

பகையினை யாக்கலும் பாவ மாக்கலும்
நகையினை யாக்கலு நவையை யாக்கலுந்
திகைமன மாக்கலுஞ் சிறுமை யாக்கலும்
நகைதரு காமத்தி னன்றி யில்லையே. (௩௯)

கைதவ மிழைத்தலுங் களவு செய்தலு
மைதுயிர் கோறலு மறத்தைக் கோறலும்
பொய்தவ வுரைத்தலும் பொருளி ழத்தலு
மெய்திய காமத்தி னன்றி யில்லையே (௪௰)

காமத்தா லிந்திரன் கலக்க மெய்தினன்
காமத்தா லிராவணன் கருத்த ழிந்தனன்
காமத்தாற் கீசகன் கவலை யுற்றனன்
காமத்தா லிறந்தவர் கணக்கி லார்களே. (௪௧)

உணங்கி யொருகான் முடமாகி யோர்கண் ணிழந்து செவியின்றி, வணங்கு நெடுவா லறுப்புண்டு வயிறு முதுகி னுயர்ந்தொட்டி, யணங்கு நலிய மூப்பெய்தி யகல்வாயோடு கழுத்தேந்திச், சுணங்கன் முடுவ லதைத்தொடர்ந்தா லெவரைக் காமன் றுயர்செய்யான். (சஉ)

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்க ளிமலன் றனைக், கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும் பெரியசுகங் கிடைக்குங் காம, வெட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித் தாலி, கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலைதானே. ()

## கோபக்கொடுமை.

கோபத்தாற் கௌசிகன் றவத்தைக் கொட்டினான்
கோபத்தா னகுடனுங் கோல மாற்றினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே. (சச)

வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால். (சரு)

பெரியவர் தம்மைக் காய்ந்தான் பிறங்கல்கல் லியகோ லொப்பான், புரிவன புரியப் பட்டுப் புலம்புய னெத்தார்க் காய்ந்தா, னெரிநர கத்தில் வீழ்வ னிழிந்தவர்க் காய்ந்தா னென்று, லொருவர்த மிடத்துஞ் சீற்ற முறுமையே நன்று மாதோ. (சசா)

மூங்கிலிற் பிறந்து முழங்குதீ மூங்கின் முதல்ற முறுக்கு மா போலத், தாங்கருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து தன்னுறு கிளையெலாஞ் சாய்க்கு, மாங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா லதனையுள் ளடக்கவு மடங்கா, தோங்கிய கோபத் தீயினை யொக்கு முட்பகை யுலகில்லை யுண்டோ. (௩௭)

உலோபக் கொடுமை.

பொலிவளந் தங்கிய புவியிற் றானுண்டும்
பலிபிறர்க் கிட்டுமே பயின்றவ் வான்பொருள்
வலியிலாப் பேடிகை வாள்கொ லாணென
வலியினை மேவிய வரம்பை யேகொலோ. (௩௮)

கொழுநனைப் பழித்த கோதைக் குழவியைக் கணவ னேந்தி
யழுமதற் கிரங்கி யாற்ற வவணகைத் திடுதல் போல
வெழுதுமுத் தமிழோர்க் கியா ரிருநிதி தன்னைத் தேடிப்
பழுதறப் புதைப்பக் கண்டு பார்மக ணகைக்கின் றாளே (௩௯)

எண்ணான்கு முப்பத் திரண்டெற் காட்டி யிசைவுடனே
புண்ணாகிச் செந்தமிழ்ப் பாடிவந் தாலுமிப் பாரிலுள்ளோ
ரண்ணாந்து கேட்ப ரழகழ கென்ப ரதன்பிறகு
சுண்ணாம்பு பட்ட விலையுங் கொடார்கவி சொன்னவர்க்கே()

மண்ணார் சட்டி கரத்தேந்தி மரநாய் கவ்வுங் காலினரா, யண்ணாந் தோடி யிரப்பாரை யறிந்தோ மறிந்தோ மம்மம்மா, பண்ணார் மொழியார் பாலடிசில் பைம்பொற் கலத்திற் பரிந்தூட்ட, வுண்ணா தின்றே யொருவருக்கு முதவா மாந்தரிவர்தாமே. (௪௰)

வாருநீ ராரென்ன வித்துவா னென்னலு மதிமோசம் வந்ததென்றே, வாய்குளறி மெய்யெலா நடுநடுக் குற்றபின் வந்தகா ரியமேதெனச்,—சீருலா வியகாமதேனுவே தாருவே சிந்தாம ணிக்குநிகரே, செப்புவச னத்தரிச் சந்த்ரனே யென்னலுஞ் சினந்திருக ணுஞ்சிவந்தே,—யாரைநீ மாடுகன் மாமென் றுரைத்தனை யலாதரிச் சந்த்ரனென்றே, யடாதசொற் சொற்றனை யார்க்கடிமை யாயினும் யார்கையிற் பெண்டை விற்றோந்,—தீருமோ விந்தவசை யென்றென்று மீயாத தீயரைப் பாடாதருள், திருமன்று ளாடுகின்று நடமொன்று புரிகின்ற தென்றில்லை நடராஜனே. (௫௨)

இடுக்கினால் வறுமை யாகி யேற்றவர்க் கிசைந்த செல்வங்
கொடுப்பதே மிகவு நன்று குற்றமே யன்றி வாழ்வார்
தடுத்ததை விலக்கி னோர்க்குத் தக்கநோய் பிணிக ளாகி
யுடுக்கவே யாடை யின்றி யுண்சோறும் வெல்ல மாமே. (௫௩)

### அவாவின் கொடுமை.

கள்ளிக்கு மாலாக்கி காற்கு விலங்காக்கிப்
பிள்ளைக் கடையாணிப் பின்னிருக்கிப்—பொல்லாக்
கடிமிடற்றன் சோணேசன் கற்பித் துயிரைப்
படுகுழியிற் பாச்சுவதைப் பார். (௫௪)

ஆசையெனும் பாசத்தா லாடவர்தஞ் சிந்தைதனை
வீசிமனை யாந்தறியில் வீழ்த்தியே—மாசுபுரி
மாயா மனைவியரா மக்கண் மகவென்னும்
நாயாற் கடிப்பித்த னுடு. (௫௫)

ஏவரை யும்மனந் திரிப்பது மீன்றவர் தமக்குத்
தவறி ழைத்திடப் புரிவதுந் தையலார் தங்கள்
கவறில் கற்பினை யிழப்பதுங் கற்குநூற் கலைக
ளவையெ லாங்கெடக் கெடுப்பதும் பொருள்விருப் பன்றே.()

ஆசையாற் சந்திர னங்கந் தேய்ந்தனன்
ஆசையாற் சௌபரி யறிவை நீங்கினான்
ஆசையா னராசுர னாவி போக்கினான்
ஆசையால் வாலியு மழிந்து போயினான். (௫எ)

செருக்கின் கொடுமை.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள் — மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீ
ரெறும்புந்தன் கையாலெண் சாண். (௫அ)

ஏர்பெறு மிருந்திச் செருக்க மெய்திடிற்
றேர்செவி யுடையவர் செவிட ராகுவ
ரோர்தரு முரைவலா ரூமை யாகுவர்
கூர்விழி யுடையவர் குருட ராவரே. (௫௯)

தனித்தனி முச்சுட ரியற்றித் தங்கிய
வனைத்துல கிருளையு மகற்று நான்முக
னினைப்பருஞ் செல்வம்வந் தெய்தி னீடிய
மனச்செருக் கெனுமிரு ளகற்ற வல்லனோ. (௬௰)

செல்வம்வந் துற்றபோது தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வதை யறிந்து சொல்லார் சுற்றமுந் துணையும் பேணார்

வெல்வதே கரும மல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவும் பாரார் மண்ணின்மேல் வாழு மாந்தர். ( )

சிறியரோ மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூக ராவர்
பறியணி செவியுளாரும் பயிறருஞ் செவிட ராவர்
குறிபெறுங் கண்ணு ளாருங் குருடராய் முடிவ ரன்றே. (௬௨)

பகைக் கொடுமை.

ஏற்றெழு வன்னிமே லினிது துஞ்சலாந்
தோற்றிய வெவ்விட மெனினுந் துய்க்கலாம்
மாற்றல ரலைத்திட வந்த வெந்துய
ராற்றரி தாற்றரி தலமிப் புன்மையே. (௬௩)

தாய்பகை பிறர்நட் பாகிற் றந்தையும் ருணவா னாகில்
வாய்பகை மனைவி யாரு மாவழ குற்ற போது
பேய்பகை பிள்ளை தானும் பெருமைநூற் கல்லா விட்டாற்
சேய்பகை யொருவர்க் காகு மென்றனர் தெளிந்த நூலோர்.

மெலிய தெனவெண் ணியபகையே யிருந்து கெடுக்கு மிருக்கிடுமுன், னலிக வினைதாழ் வுற்றெறிந்த நல்லா ரெனவுந் தெளியாத, மலின ரெனவு நொதுமலரை மருவ லொழிதல் புரியற்க, வலிசெய் பகையா திகள்பெருக்கி வகையாய்த் திருக்க பகைமையற. (௬௪)

பொய்க் கொடுமை.

தான்கெடினுந் தக்கார்க்கே டெண்ணற்கத் தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்த

வையக மெல்லாம் பெறினு முரையற்கப்
பொய்யோ டிடைமிடைந்த சொல். (௩௩)

மெய்யதைச் சொல்வா ராகில் விளங்கிடு மேலு நன்மை
வையக மதனைக் கொள்வார் மனிதரிற் றேவ ராவார்
பொய்யதைச் சொல்வா ராகிற் போசன மற்ப மாகும்
நொய்யவ ரிவர்க ளென்று நோக்கிடா ரறிவுள் ளோரே. (௩௭)

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியா மவருக்குப் பொய்யா காத, மெய்யருக்குப் பொய்யுரைத்தாற் றேய்பிறைபோற் றவங்குறையு மிடியுண் டாகும், துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால் வறுமைபிணி தொலையா வென்று, முய்யவரு டேசிகற்குப் பொய்யுரைத்தா னரக மது வுண்மைதானே. (௩௮)

ஆயத் துறையிற் பிறந்துவந் தந்தணர் பால்குடித்து
மாயக்கண் வேசை யிடத்தே வளர்ந்துவண் ணன்றொருநா
ளேயப் புலவ ரிடத்தெட்டு நாள்செட்டி யேனென்றபின்
போயக்க சாலை புகுந்தனள் காணந்தப் பொய்மகளே. (௩௯)

பூசாரி பொய்யும் புலவோ ருரைத்தபொய்யுங்
காசாசை வேசையர்கள் கற்றபொய்யுங்—கூசாமற்
றட்டார்கள் பொய்யுஞ் சவுளிக் கடைப்பொய்க்குக்
கட்டாது கால்வரிசை காண். (௪0)

பிறர்மனை நயத்தல்.

உணர்வறுஞ் செல்வமு முயர்வு மேயறுங்
குணமறுங் குலமறுங் கொடிய நோயெலா
மணவுறு நரகுறு மாயு டேயுமால்
கணமறு மாதர்தோள் கலக்குந் தூர்த்தர்க்கே (௪௧)

மிக்க மென்றசை யிருந்திட வெற்றெலும் பதனைத்
தக்க தென்றுபுன் ஞமலிகள் களித்தன தளர்ந்து
துக்க மொன்றுமி றம்மனை துறந்துபோய்ப் பிறரில்
புக்கு வெந்துயர்க் கடற்படு மிழுதைகள் போல. (எ௨)

பிறம னைக்குரிய பேதைய ரிடத்து விழைவாய்க்
குறுகு காலிணை குறைத்திடுதி கொம்மை முலைமே
லிறுகுறத் தழுவு கையிணையை யீர்தி யவர்மே
லுறுசி னத்தினொடு முழிக ணிறுத் திடுதியால். (எ௩)

பெண்புத்தி கேட்டற் கீழ்மை.

தன்னைப் புகழ்வானுஞ் சாட்சிசொல்லி நிற்பானும்
பொன்னை மிகத்தேடிப் புதைப்பானு—மொன்னலர்தம்
நன்புத்தி கேட்பானு நாணமில் லாதானும்
பெண்புத்தி கேட்பானும் பேய். (எ௪)

பெண்டுகள்சொற் கேட்கின்ற பேயர்களே குணமுடைப் பேடிலோபர், முண்டைகளுக் கிணையில்லா மூனவீரர் புருடரென மொழியொ ணாதே, யுண்டுலக முதிப்பாருள் கீர்த்தி யற மின்னதென வுணர்வே யில்லா, ரண்டினவர் தமைக் கெடுப்பா ரழிவழக்கே சொல்வதவ ரறிவு தானே. (எரு)

மங்கைகைகை சொற்கேட்டு மன்னர்புகழ்த் தசரதனு மரணமானான், செங்கமலச் சீதைசொல்லை சீராமன் கேட்டவுடன் சென்றான் மான்பின், றங்கையவள் சொற்கேட்ட விராவணனுங் கிளையோடு தானு மாண்டா, னங்கையர்சொற் கேட்பதெல்லாங் கேடுவரும் பேருலகோர் நகைப்பர் தாமே.

மாதுசித்தி ராங்கிசொல்லான் மைந்தனைக்கை கால்களைந்
தேதுபெற்றா ஞேர்மன்ன னிப்புவியில்—நீதிநெறி
மாதவனே புன்னை வனநாதா பாகைமன்ஞு
வேதெனினுந் தையல்சொற்கே ளேல். (எஎ)

## தீமைசெய்தலின் பயன்.

மூடவனை மூர்க்கன் கொன்ருல் மூர்க்கனை முனிதான் கொல்லும், மடவனை வலியான் கொன்ருல் மறலிதா னவனைக் கொல்லுந், தடவரை முலைமா தேயித் தரணியி லுள்ளோர்க் கெல்லாம், மறவனை யடித்தகோலும் வலுவனை யடிக்குங் கண்டாய். (எஅ)

## ஏற்றலி னிழிவு.

பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
யில்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்தஞான்றும். (எகூ)

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித் தானு, இல்லைத்தான் பொன்னைத்தா னெனக்குத்தான் கொடுத்துத்தா னிரட்சித்தானு, அல்லைத்தான் சொல்லித்தா னியாரைத்தா னேவத்தா னையோ வெங்கும், பல்லைத்தான் றிறக்கத்தான் பதுமத்தான் புவியிற்ருன் பண்ணினுனே. (அ௦)

மாவலிபான் மண்ணிரக்க மாதவனே வாமவுரு
வாமென்ருன் மற்றவர்க்க தாகுமோ—மூவுலகிற்
பேர்பரவு புன்னைவனப் பேரரசே யெவ்வனுகையாற்
சீர்பெறினு மேற்பதிகழ்ச்சி. (அக)

## கல்விப்பெருமை.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங் கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. (௮௨)

கல்வியே நல்லுயிரைக் காப்பதற்கு நற்றுணையாங்
கல்வியே நல்லுடம்பைக் காப்பதாம்—கல்வியே
செல்வப் பொருளின்பஞ் சேர்க்குந் தலைமைசேர்
செல்வமாஞ் செய்யுஞ் சிறப்பு. (௮௩)

மனைக்கு விளக்க மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கு
மோதிற் புகழ்சா லுணர்வு. (௮௪)

தேசிக மெவ்வ ணங்கள் சிறந்தநற் கலங்கண் மிக்க
காசினி யிரதஞ் சொன்னங் கரிபரி படைத்தோ ரேனும்
நேசமாம் வித்தை யற்று னிறைந்திடு முருக்கம் பூப்போல்
வாசனையிலாம னின்று மயங்கிடு வாராமன்றே. (௮௫)

வெள்ளத்தா லழியாது வெந்தணலால் வேகாது வேந்த ராலுங், கொள்ளத்தான் போகாது கொடுத்தாலு நிறைவன்றிக் குறைவி ராது, கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ மிகவெளிது கல்வி யென்னு, முள்ளபொரு ளுள்ளிருக்கப் புறம்பாகப் பொருடேடி யுழல்கின் றாரே. (௮௬)

வெள்ளத்தே போகாது வெந்தணலில் வேகாது
கொள்ளத்தான் போகாது கொடுத்தாலுங் குறையாது
கள்ளருக்கு மெட்டாது காவலுக்கு எளிமையாது
உள்ளத்தே பொருளிருக்க வூரிலுழைத்துழல்வா னேன். ( )

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. (அஅ)

கற்கக் கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக. (அகூ)

எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. (கூ0)

## வித்தையைப் பயிலுநாள்.

அட்டமியி லோதினு லாசானுக் காகாது
சிட்டருக்குப் பன்னான்கு தீதாகும்—கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை. (கூக)

## அறச்சிறப்பு.

வேடமு நீறுஞ் சாத்தி வேதநூல் மிகவுங் கற்றே
யேடவிழ் குழலாள் பங்க னீசனுக் கடிமை யார்க்குப்
போடவே வேண்டு மன்னம் பொறுக்கவே வேண்டுங்குற்றந்
தேடவே வேண்டு நன்மை செய்யவே வேண்டுந் தர்மம். ( )

தருமமென் றொருபொரு ளுளது தாவிலா
இருமையி னின்பமு மெளிதி னாக்குமா
லருமையில் வரும்பொரு ளாகு மன்னது
மொருமையி னோர்க்கலா லுணர்தற் கொண்ணுமோ. ()

சிலப்பதிகாரம்.

நாளைச் செய்குவ மறமெனி லின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை. (௬௪)

பசி மிகுந்த பின்னெல்லை விதைப்பதுபோல் வீட்டிடைத் தீப் பற்றிக் கொண்டு, நசியும்போ ததையவிக்க வாறுவெட்டல் போலுப்போர் நடக்குங் காலை, விசிகநூல் கற்கமுயல் வதுபோலுங் கபமிஞ்சி விக்கிச் சிக்கி, யிசிவுகொண்டு சாங் காலத் தெப்படிநீ யறம்புரிவா யிதயப் பேயே. (௬௫)

இன்றருணோ தயங்கண்டோ முயர்ககன முகட்டின் மிசை யிந்தப் பானு, சென்றடைய நாங்காண்ப ததையமதைக் காண்கினுமேற் றிசையி ருக்குங், குன்றடையு மளவுநா முயிர் வாழ்வ தரிதநின் முன் குறுகுங் கூற்ற, மென்றச்சத்துடன் மனமே மறவாம லறவழியி லேகுவாயே. (௬௬)

தன்னுட லினுக்கொன் றீந்தாற் றக்கதோர் பலம தாகும்
பின்னியல் வேசிக் கீந்தான் மெய்யினில் வியாதி யாகும்
மன்னிய வுறவர்க் கீந்தால் வருவது மயக்க மாகு
மன்னிய பரத்துக் கீந்தா லாருயிர்க் குதவியாமே. (௬௭)

எய்தற்கரிய யாக்கைதனக் கெய்திற் றென்று லதுகொண்டு, செய்தற்கரிய வறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியினின், றுய்தற்கொருமை பெறவொண்ணு துழல்வோ னுடம்பு பொற்கலத்திற், பெய்தற்கரிய பால்கமரிற் பெய்த தொக்குமென்பரால். (கூஅ)

கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா லயத்திற் கீந்து
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டு வந்து
வைப்பென விரப்போர்க் கீந்து வருபவ ருளரேற் கூற்ற
மொய்ப்புயத் தண்டந் தப்பி முன்னவ னின்பந் தாழ்வார். ()

அன்புறு மறத்தினு லடுக்கு மின்பமே
யின்பெனத் தக்கதா லேனை யின்பெலாந்
துன்பமும் பழியையுந் தோற்று மாதலால்
வன்புறு மறத்தினை மறப்பிற் கேடுறும். (ரு)

வைத்ததனை வைப்பென் றுணரற்கத் தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலு—மத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்யி னஃதன்றே
எய்ப்பினில் வைப்பென் பது. (ருக)

### ஈகையின் பெருமை.

கொடையே யெவர்க்கு மெப்பேறுங் கொடுக்கு நெறியிற் பிறழாத, கொடையே யாருந் தன்வழியி னொழுகச் செய்யுங் குறைதீர்த்த, கொடையே பகையை யுறவாக்குங் குலவும்பூத மனைத்தினையுங், கொடையே புரக்கு மென்றுள்ளங் கொள்ளப் புகன்றுன் கவுதமனே. (ருஉ)

திரவியம் வந்த போது சேர்ந்தபல் லோர்க்கு மீந்தால்
வரவர வளமா மந்த வகைசெயா விடிற்கெட் டேகு
மொருகலிங் கினைவிட் டக்கா லோதநீர் போக்குப் போகும்
பெருகுறு மேரி யில்லா விடினடு வணையைப் போக்கும். (௩௩)

கவளமுண் களிப்புக் கொள்ளுங் காலையிற் வாயிற் சிந்தித்
தவறிய பருக்கை யாலத் தந்திக்குச் சேத முண்டோ
உவமையி லெறும்பு கோடி யுடலது நிறைபு மென்னிற்
றவமதை யறிந்த பேர்கள் தாங்குவா ரிளைத்தோர் தம்மை. ()

மடுத்தபா வாணர் தக்கோர் மறையவ ரிரப்போர்க்
கெல்லாங், கொடுத்தவர் வறுமை யுற்றுர் கொடாதுவாழ்ந் தவ
ரார் மண்மே, லெடுத்துநா ண்டநீரு மெடாதகாட் டகத்து
நீரு, மடுத்தகோ டையிலே வற்றி யல்லதிற் பெருகுந்
தானே. (௩௫)

சாதல்வந் தடுத்த காலுந் தனக்கொரு சாத லின்றிப்
பூதல மிறக்குங் காலும் புகழுடம் பிருக்கு மந்தக்
கோதறு புகழின் யாக்கை கொடையினுற் செல்வங் கூர
வாழ்தலை யுடையா ரன்றே மானமும் வணங்கு ரோர். (௩௬)

பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்தபோது
வேடனுக் குதவி யாக விறகினுல் வெந்தீ மூட்டிச்
சாடுறும் பசியை நீக்கித் தன்னுயிர் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தில் விழுமி தன்றே. ()

என்னுனு மோருதவி யாதொருவன் யார்க்கெனினுந்
தன்னுன் முடிவதெனிற் றுனே முடித்தறலை
சொன்னுன் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னுன் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே. (௩௮)

கல்லா றெனினுங் கொளற்று மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. (௯௬)

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ ளுமுடைய
வைத்திழக்கும் வன்க ணவர். (௯௭)

புகழின்பெருமை.

பூதலத்தின் மானிடராய்ப் பிறப்பதரி தெனப்புகல்வர் பிறந்தோர் தாமு, மாதிமறை நூலின்முறை யருள்கீர்த் தியாந்தவங்க ளன்பாய்ச் செய்து, நீதிவழு வாதவகை வழக் குரைத்து நல்லோரை நேயங் கொண்டு, காதவழி பேரில்லார் கழுதையெனப் பாரினுள்ளோர் கருதுவாரே. (௯௮)

நேசனைக்கா ணுவிடத்து நெஞ்சார வேதுதித்த
லாசானை யெவ்விடத்து மப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையின் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில். (௯௯)

விருந்தின் பெருமை.

விருந்து புரந்தரான் வேளாண்மை செய்யான்
பெருந்தக் கவரையும் பேணான்— பிரிந்துபோய்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்
இல்வாழ்க்கை யென்ப திருள். (௯௯)

விருந்தினனாக வொருவன்வந் தெதிரின் வியத்தனன் மொழியினி துரைத்தல், திருந்துற நோக்கல் வருகென வுரைத்த லெழுதன்முன் மகிழ்வன செப்பல், பொருந்துமற் றவன்ற னருகுற விருத்தல் போமெனிற் பின்செல்வ தாதல், பரிந்து நன்முகமன் வழங்கலிவ் வொன்பா னொழுக்கமும் வழிபடும் பண்பே. (௱௪)

அருந்தவே கூழும் பூண வாடையும் வீடு மின்றி
வருந்துவோ ரெண்ணி லார்கம் மருங்குளா ரெனவ றிந்தும்
விருந்திடாய் மணிமாடத்து மேவிநீ யொருவன் வாழப்
பொருந்தினாய் மனமே மக்கட் போலிநீ விலங்கனாயே. ()

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு. (௮௰௬)

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன். (௮௰௭)

அன்பின்பெருமை.

இடனும் பொருளு மேவலரு மிருந்தும் பயனென் னுமு வந்த, வுடலின் பயனா கியவறத்தை வுருகவிடத்து நொது மலரும், படர்செம் பகையு முறவாக்கும் பற்றுமளிக்கு மனை மைந்தர், தொடர்பின் வளர்க்கு மன்பதனாற் சேர்ந்து மன் பின் வழுவற்க. (௮௰௮)

சலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்றா னேனு
முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனு
மிலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே. (௮௰௯)

அன்பு தோனுடை யார்க்குமி லார்க்குந்தம்
வன்ப கைப்புலன் மாசற மாய்ப்பதென்
முன்பும் பின்பின்றி மூவுல கத்தினு
மன்பி னல்லதோ ராக்கமுண் டாகுமோ. (௯௰)

தோன்று வகைகரந்துந் தோன்றலைக்கண் டுண்ணெகிழ்ந்து
தோன்றநின்றான் முன்புநளன் சோமேசா—தோன்றுகின்ற
வன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும். (௱உக)

ஆதர வுடையான் செய்யு மல்லவு நல்ல வாகும்
ஆதர விலாதான் செய்யு நல்லவு மல்ல வாகும்
ஆதர வதனாலாவிக் கருந்துணை யின்ப முத்தி
ஆதர வலாது வேறொன் றளித்திடக் கண்டதுண்டோ. ()

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு. (௱உங)
என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம். (௱உச)

அன்பின்மை.

இறைவனை யமைச்சனா யிருந்து செற்றவர்
கறவைகள் பருகுநீர்க் கயங்க ளோர்த்தவர்
பொறைவனக் கிளிகளும் வளர்க்கும் பூவையும்
சிறைபடுத் தவரெலாந் துயரிற் றீர்வரோ. (௱உரு)

அன்னமு மியற்றிய வறனும் விற்றவர்
கொன்னவன் மறையினால் கூலிக் கீந்தவர்
முன்னகை செய்துபின் பகைமொ ழிந்தவர்
சொன்னவை வழுக்குநர் துறக்க மாள்வரோ. (௱உகு)

தேவ ருக்கென விரந்துண் ணுந் தீயவர்
யாவ ருக்கும் படுநிந்தை யேற்றுநர்
காவெ னப்பிறர் வைத்தவை கைக்கொளும்
பாவ ரப்பழி பாற்றவும் வல்லரோ. (ஈஉஎ)

நண்பின்பெருமை.

சமயம்வரி னிடித்துரைப்பார் தக்கவழிச் செலச்செய்வார்
இமயவர்த முலகுறவு மிருளுலகம் பகையுமா
யமயவறி வுறுத்துவா ரந்தோநூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குங் காண்கிடைக்கு மரிதரிது. ()

பொன்னுள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளா னயிடினு
மென்னுள்ளா னவனவ னிருந்தவர்த நட்பிலனேல்
பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்லா னயிடினும்
என்னில்லா னவனவ னிருந்தவர்த நட்புளனேல். (ஈஉகூ)

மங்கு லம்பதி னயிரம் யோசனை மயில்கண்டு நடமாடுந்
தங்கு பானுநா றாயிரம் யோசனை தாமரை முகம் விள்ளுந்
திங்களாதவற் கிரட்டியோ சனையுறச் சிறந்திடு மரக்காம்ப
லெங்க ணாயக னண்பரா யிருப்பவ ரிதயம்விட் டகலாரே. ()

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. (ஈ௩க)

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. (ஈ௩உ)

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்
கெதிர்செலத் தின்ற தகைத்தரோ வென்று
மதுரமி லாளர் தொடர்பு. (ஈ௩௩)

## நன்றியிலாரிழிவு.

பருப்ப தங்கள்போ னிறைந்திடு நவமணிப் பலன்களைக் கொடுத்தாலும், விருப்ப நீங்கிய கணவரைத் தழுவுதல் வீணதாம் விரையார்ந்த, குருக்கொள் சந்தனக் குழம்பினை யன்பொடு குளிர்தர வணிந்தாலுஞ், செருக்கு மிஞ்சிய வற்பர்தந் தோழமை செப்பவு மாகாதே. (௱௩௪)

நறவு சந்தனக் குழம்பொடு நறுஞ்சுவை நலம்பெற வணிந்தாலுஞ், சருவ சந்தேக மனமுடை மாதரைத் தழுவலு மாகாதே. பருவ தங்கள்போற் பலபல நவமணிப் பைம்பொனை யீந்தாலுங், கெருவ மிஞ்சிய மானிடர் தோழமை கிட்டலு மாகாதே. (௱௩௫)

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்று—நுண்ணூ
லுணர்விலரா ராகிய வூதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று. (௱௩௬)

## பெரியாரின் றுணைபெறுதல்.

கற்பகத் தருவைச் சார்ந்த காகமு மமிர்த முண்ணும்
விற்பன விவேகமுள்ள வேந்தரைச் சேர்ந்தோர் வாழ்வு
ரிப்புவி தன்னி லென்று மிலவுகாத் திடுங்கிளிப்போ
லற்பரைச் சேர்ந்தோர் வாழ்வ தரிதரி தாகுமம்மா. (௱௩௭)

சிறிய ராயினுர் சார்பினை விழையன்மின் றிறல்கெழு பெரியோரா, மறிஞ ராயினுர் சார்பினை விழைமினோ வலரி தழ்விரிகொன்றை, வெறிந றுந்தொடை யெம்பிரான் சார்பினை விழைதலா லுரகங்கண், மறுவி லாற்றல்சால் கலுழனை வினுயின வாழ்ந்தனை யோவென்ன. (௱௨௮)

தந்தை யிரணியனைத் தள்ளிப் பிரகலாதன்
சிந்தையின்மா யன்றுணையே தேடினான்—சந்ததமும்
நட்பறியும் புன்னைவன நாதமகி பாவுலகிற்
குட்பெரியா ரைத்துணைக் கொள். (௱௩௯)

ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து. (௱௪௰)

உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். ௱௪௧)

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. (௱௪௨)

பயனற்றவை.

தெருளிலாக் கலையினோர் செருக்கு மாண்மையும்
பொருளிலா வறிஞர்தம் பொறிய டக்கமும்
அருளிலா வறிஞர்த மௌன வாழ்க்கையுங்
கருவிலா மங்கையர் கற்பு மொக்குமால். (௱௪௩)

ஆபத்துக் குதவாப் பிள்ளை யரும்பசிக் குதவா வன்னந்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திர மறியாப் பெண்டீர்
கோபத்தை யடக்காவேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனில்லை யேழுந்தானே. ()

சந்திர னில்லா வானந் தாமரை யில்லாப் பொய்கை
மந்திரி யில்லா வேந்தன் மதகரி யில்லாச் சேனை
சுந்தரப் புலவ ரில்லாத் தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திக ளில்லா வீணை தனமிலா மங்கை போலாம். (௱௪௫)

மாடில்லான் வாழ்வு மதியில்லா வாணிபமும்
நாடில்லான் செங்கோ னடாத்துவதும்—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டும்
விருந்தில்லா வீடும் விழல். (௱சசு)

கெற்பந்தான் மங்கையருக் கழகு குன்றுங் கேள்வியில்லா வரசனு லுலகம் பாழாந், துற்புத்தி மந்திரியா லரசுக்கீனஞ் சொற்கேளாப் பிள்ளைகளாற் குலத்துக்கீனம், நற்புத்தி கற்பித்தா லற்பர் கேளார் நன்மை செய்யத் தீமையுடனயந்து செய்வார், அற்பரோடிணங்கிவிடிற் பெருமைதாழு மரிய தவங் கோபத்தா லழிந்துபோமே. (௱சஎ)

திருப்பதி மிதியாப் பாதஞ் சிவனடி வணங்காச் சென்னி
யிரப்பவர்க் கீயாக் கைகள் ளினியசொற் கேளாக்காது
புரப்பவர் தங்கள் கண்ணீர் பொழிதரச் சாகாத்தேக
மிருப்பினும் பயனென் காட்டி லெரிப்பினு மில்லைதானே. ()

தெருளுறக் கற்றிலார் செருக்கி லாததும்
பொருளிலா வறிஞர்தம் பொறி யடக்கமும்
மருளுறு மூகர்த மௌன சாதமு
முருவிலா மடந்தையர் கற்பு மொக்குமால். (௱சகூ)

சோமனுடா வாழ்வுஞ் சோறிடா நல்லுறவும்
நாமஞ் றில்லாத நன்னுதலும்—ஓம
நெருப்பில்லா வேதியரு நெய்பா லுடனே
பருப்பில்லாப் போசனமும் பாழ். (௱நு0)

கடன்படு பிதாவுமெங்குங் கண்டவர் தங்கட்கெல்லா
முடன்படு மன்னை தானு முயர்ந்திடும் ரூபந்தானே
யடர்ந்திடும் பாரி வித்தை யப்பியாசி யாத பிள்ளை
தடங்கணா யிவர்க ணால்வர் சத்துரு வாவர் தாமே. (௱௫௧)

தண்டுகொண் டோட்டினும்போகாது நம்மைத் தரிசிக்கலே, பண்டுவந் தோர்க்கின்று தாம்பூலம் வைத்துப் பரிந்தழைத்தும், திண்டுமீண்டுஞ்சொல்லி வாராதொழிந்தனர் செய்கையெல்லாங் கண்டுகொண் டோமினித் தொண்டுகொண் டோநங் கடவுளுக்கே. (௱௫௨)

ஒழுக்கம்.

தாழ்ந்த வருணத் துதித்தோருந் தக்கோராவரொழுக்கத்தால், வீழ்ந்த வொழுக்கத் தாரிழிவர் மேலாம் வருணத் துதித்திடினுஞ், சூழ்ந்த துணையாஞ் சிறப்பின்பஞ் சுரக்கு மதனா லுயிர்தனினும், வாழ்ந்த வொழுக்க மோம்பிடுக வழுக்கி னிடும்பை யேதருமே. (௱௫௩)

புண்ணிய நன்னீராடல் கடவுளர் பூசையாற்ற
லுண்ணிறை மகிழ்ச்சி வேத பாரகர் கூட்டறிய
கண்ணய வாமை கள்ளா தொழுகுதல் கடுஞ்சொ லின்மை
யெண்ணிய விவைக ணான்கு குலத்திற்கு மியைந்த வாமால் ()

நேசநல் வாச மீகை சத்திய நித்தம் வேண்டும்
மாசிலாமேலோர் தம்மை மகிழ்ந்துபூ சிக்க வேண்டுந்
தேசமுஞ் சிறக்க நீதி செய்திட வேண்டு மென்று
மாசற வுரைத்த நீதி யறிவித்தே னவனுக் கென்றான். (௱௫௫)

தாரணிபோ லெவ்வுயிருந் தாங்குந் தகைமையதாச்
சீரணிந்து நாளுஞ் சிறந்தோங்க—வாரந்
தழைத்தபுகழ் புன்னைவனத் தாடாளா யார்க்குங்
குழைந்தொப் புரவொழுகு. (௱௫௬)

தீயனவே சொல்லுஞ் சிசுபாலன் முன்புகண்ணன்
றாயதலாச் சொல்லுரையான் சோமேசா—வாயின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (௱௫௭)

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும். (௱௫௮)

அடக்கமுடைமை.

இளையா னடக்க மடக்கங் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பயன்—எல்லா
மொறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. (௱௫௯)

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும். (௱௬௰)

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு. (௱௬௧)

எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. (௱௬௨)

பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையா—னெய்யுறையும்
கூந்தன் மயிலன்னாய்க் குழீ இவான் விண்ணோர்க்கு
வேந்தனா மிவ்வுலகம் விட்டு. (௱௬௩)

அடக்கமின்மை.

கற்றறிவு குலமேன்மை கருணைபெரும்
புகழ்செல்வஞ் சைம்மா றெண்ணா
தூற்றதவுங் கொடைசீர்மை யொழுக்கமருந்
தவநியம முறவின் கேண்மை
மற்றெதிரி லாத்திண்மை வாய்மையிருந்
தூய்மைகுண வனப்பி யாவும்
பெற்றிடினு மடக்கமில்லாப் பெருமிதத்தா
லித்தனைக்கும் பிழையுண் டாமால். (௱௬௪)

காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே—நாணாமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி. (௱௬௫)

கல்விச்செருக்கு.

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (௱௬௬

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா
அவிர்க்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங்—காக்குஞ்
சில்கற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல். (௱௬௭)

பருத்திவிதைத் தெடுத்துநூ லாக்கி யாடை
பண்ணியளித் தாலுடுத்தல் பார மாமோ
திருத்திமண்ணிற் செந்நெல்விதைத் தரிசி யாக்கித்
தீஞ்சோறட் டேட்டிலுண்ணச் செவ்வாய் நோமோ
அருத்தமோ டிலக்கணங்க ளிலக்கி யங்க
ளரியநூற் பலமுன்னோ ரளித்த தாலே
கருத்தேயந் நூல்கள்சில கற்று ணர்ந்து
கவிசொல்லல் வியப்பன்று கர்வ மென்னே. (௱௬௮)

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
றேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்கா
ணெல்லோர்க்கு மோவ்வொன் றெளிது. (௱௬௯)

உள்ளத்தூய்மை.

ஓடும் பொன்னு முறவும் பகையுமோர்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையும்
வீடுங் கானமும் வேறற நோக்குதற்
கூடுந்தன்மை கொளுமன நன்மனம். (௱௭௰)

கொல்லாமை.

எவ்வுலகும் பராபரன்சந் நிதிய தாகு - மிலங்குமுயி
ருடலனைத்து மீசன் கோயி, லெவ்வுயிரு மெம்முயிர்போ

லென்று நோக்கி - யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை,
வெவ்வியெம தூதாருந் தண்டஞ் செய்து - வல்லிரும்பை யுருக்
கியவர் வாயில்வார்த்து, வெவ்விய தீ யெழுநரகில் வீழ்த்தி
மாறு - வேதனைசெய் திடுவரென வோது நூலே. (௱௭௪)

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்
கொலையின னளிக்கு மன்னங் கூறில்வல் விடம தாகுங்
கொலையின னளிக்கு மன்னங் கொடும்பவ மளிக்கு மூலங்
கொலைஞர்தம் மனையி லுண்பான் கொலைஞனே யாவனன்றே.

இத்திற னருள்கைப் பற்றி யுயிர்க்கெலா மிதத்தைச் செய்க
சத்திய மிரக்க மின்றேன் முத்தியைச் சார்கிலார்சற்
பத்தியா மியோகஞ் சாரும் யோகத்தாற் பரம ஞானஞ்
சித்தியா மிதற்கா தாரஞ் சீவகா ருணிய மன்றே. (௱௭௫)

கங்கையிற் படிந்திட்டாலுங் கடவுளைப் பூசித் தாலும்
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலுஞ்
சங்கையில் லாதஞான சாஸ்திர முணர்ந்திட் டாலும்
பொங்குறும் புலால் புசிப்போன் போய்நர கடைவ னன்றே.

அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
யிம்மா னிடரெல்லா மின்புற் றிருக்கின்று
ரம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமெனிற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

வேந்துமகற் றேர்க்கால் விடலஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதனதாவிவிட்டான் சோமேசா - வாய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (௱௭௬)

கூறுபோட்டவன் கொன்றவன் தின்றவன்
கூடநின்றவன் சொன்னவன் கேட்டவன்
ஆறுபேர்க்கு மருநர கேகதி
யாழிபோற்றினை றுழமுண் டாக்கியே
சிறுபூச்சிசெய் யான்மர வட்டைகள்
தேளுநட்டுவக் காலிசெம் பாம்புகள்
வீறுபூச்சிகள் வேணதெல் லாம்விழ
விழவீழ்த்துவர் வேலர்தம் மாணையே. (௱௭௭)

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
வெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே. ()

தங்கண்மக்களுந் தாங்களும் படுந்துயர் தமக்கோ
ரெங்கண் மக்களும் யாங்களு மென்செய்தோ மினிமே
லெங்கண் மக்களும் யாங்களு மின்றுறு துயரைத்
தங்கண் மக்களுந் தாங்களும் படுவர்சத் தியமே. (௱௭௯)

ஊழ்.

அலரவன் றீட்டி வைத்த வாயுளி னளவு காறும்
விலகிலா வினைக்குத் தக்க விருப்புறு வெறுப்பு றுவு
மிலகவுண் டின்றே லின்று மின்னுயி ருடம்பின் வாழ்தன்
மலர்தலை யுலகத் தென்று வகுப்பர்நூ லுணர்ந்த வல்லோர்.
தேற்றமுற் பவத்திற் செய்த தீக்குநன் கெனுமிரண்டு
மாற்றல்சால் கரும மென்ப ரக்கரு மத்தை நோக்கிச்
சாற்றுமிப் பிறப்பிற் றக்க தரித்திரஞ் செல்வ நல்கிப்
போற்றுவ னுயிரை யெல்லாம் பொலிசுடர்த் திகிரி வள்ளல்.

துன்பம் வேட்டல சூழுவது சூழுங்கா லதுபோ
லின்ப மென்பது முயன்றுழ லாதுவந் தெய்து
முன்பராபரன் முடித்ததே முடியுமென் றெண்ணி
யன்ப ராய்த்தொழ முயல்வதே முயற்சியென் றறியார். ()

அவரவர் வினைவி னவரவர் வருவா ரவரவர் வினையள வுக்கே, யவரவர் போக மென்றதே யாயி னாருக்கார் துணைய தாகுவார்க, ளவரவர் தேக முளபொழு துடனே யாதர வாரென நாடி, யவரவ ரடைத னெறிகன்மத் தடையு மாதர வாதர வாமே. (௱௮௩)

சமர்த்தனெனப் பெயர்படைத்து மலையிலிருந் தெழுகட லைத் தாண்டி னாலு, மிமைப்பொழுதிற் பூலோகச் சக்ரவர்த் தி யென்றுபெய ரெடுத்திட் டாலுஞ், சுமக்குமன்னைக் கருக் குழியி லின்னதென வாதியிலே சூட்டு வேத; னமைத்தபடி முடியுமல்லா னினைத்தபடி முடியாதே யளவு தானே. (௱௮௪)

நாடெலாஞ் செந்நெல் விளையினு மோடை நதியெலா நவமணி கொழித்துங், காடெலா மாடை காய்க்கினு மேகங் கனகமாய்ச் சொரியினு முலகி, லாடலம் புரியு மம்பல வாண ரவரவர்க் கமைத்ததே யல்லால், வீடெலாம் புகுந்து தேடி னும் வருமோ விதியலால் வேறுமற் றுளதோ. (௱௮௫)

ஆங்கால மெய்வருந்த வேண்டா மருங்கொய்பிற்
றேங்காய்க் கிளநீர்போற் சேருமே—போங்காலங்
காட்டானை யுண்ட கனியதுபோ லாகுமே
தேட்டாளன் றேடுந் தனம் (௱௮௬)

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக்கொ ளற்கு. (௱௮௭)

பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை. (௱௮௮)

மானம்.

கூனொடு வெதிரே பங்கு குருடுபே ரூமை யானோ
டூனம தடைந்த புன்மை யாக்கையோ டழியு மம்மா
மானம தழிந்து தொல்லை வலியிழந் துலகில் வைகு
மேனையர் வசையின் மாற்ற மெழுமையு மகல்வதுண்டோ. ()

மானமுள் ளோர்க டன்னோர் மயிரறி னுயிர்வாழாத
கானுறு கவரி மான்போற் கமைமெறு புகழே பூண்பார்
மானமொன் றில்லார் தாமு மழுங்கலாய்ச் சழங்க லாகி
யினயாங் கழுதைக் கொப்பா யிருப்பரென் றுரைக்க லாமே.

என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்—தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய். (௱௯௧)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின். (௱௯௨)

அறிஞர்.

மாதர்க் கிதங்கவி வாணர்க்குச் சால வணக்கங்குரு
நாதர்க்கு நீதியோ டாசாரங் கல்வி நயந்தவர்க்குக்

கோதற்றவாசகம் பொய்க்குப்பொய் கோளுக்குக் கோளறிவி லாதர்க்கிரட்டிப் பறிவுடை யோர்செய்யு மாண்மைகளே. ( )

தன்மானங் குலமானந் தன்னைவந்தே யடைந்தவுயிர் தங் கண் மான, மென்மான மாகிலென்ன வெல்லவருஞ் சரியென வே யெண்ணம் போந்து, நன்மானம் வைத்தெந்த நாளுமவர் தங்களுக்கு நன்மை செய்வோர், மன்மானி யடைந்தோரை காக்கின்ற வள்ளலென வழுத்தலாமே. (௱௯௪)

பொல்லார்க்குக் கல்விவரில் கெர்வமுண்டா மதனோடு பொருளுஞ் சேர்ந்தாற், சொல்லாதுஞ் சொல்லவைக்குஞ் சொற்சென்றுற் குடிகெடுக்கத் துணிவர் கண்டாய், நல்லோ ர்க்கிம் மூன்றுகுண முண்டாகி லருளதிக ஞானமுண்டா, மெல்லோர்க்கு முபகார ராயிருந்து பரகதியை யெய்துவாரே

முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினு நல்கார் கயவர்—நனிவிளைவிற்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை. (௱௯௫)

மௌனம்.

ஆந்தைவீச் சிட்டதுவு மம்மறவன் கொன்றதுவுஞ் [ல்
சார்ந்திருந்தோ ரோடிப்போய்ச் சாற்றியதும்—வேந்தன்முத
பண்டுளசுற் றத்தார் பரிந்தோடி வந்ததுவுங்
கண்டிருந்தும் பேசுவரோ காண். (௱௯௭)

வேசையரிழிவு.

வெம்புவாள் விழுவாள் பொய்யே மேல்விழுந் தழுவாள் பொய்யே, தம்பலந் தின்பாள் பொய்யே சாகிறே னென்

பாள் பொய்யே, யம்பிலுங் கொடியகண்ணா ளாயிரஞ் சிந்தையாளை, நம்பினபேர்க ளெல்லா நாயினுங் கடையாவாரே.

ஆலகால விடத்தையு நம்பலா மாற்றையும் பெருங் காற்றையு நம்பலாங், கோல மாமத யானையை நம்பலாங் கொல்லும் வேங்கைப் புலியையு நம்பலாங், காலனார்விடு தூதரை நம்பலாங் கள்ளர் வேடர் மறவரை நம்பலாஞ், சேலை கட்டிய மாதரை நம்பினாற் றெருவினின்று தியங்கித் தவிப்பரே. (௧௬௬)

அத்தியின் மலரும் வெள்ளை யாக்கைகொள்காக்கை தானும்
பித்தர்தம் மனமு நீரிற் பிறந்தமீன் பாதந் தானும்
அத்தன்மால் பிரம தேவ னாலளவிடப்பட்டாலுஞ்
சித்திரவிழியார் நெஞ்சந் தெரிந்தவ ரில்லை கண்டீர். (உ௧)

படிறெ னப்பொழு தேவஞ்சைத்திடு பச்சை நாவியை நம்பலாம், பழிந மக்கென வழிம றித்திடு பழைய நீலியை நம்பலாங், கொடும தக்குல டெனவ ளர்ந்திடு குஞ்ச ரத்தையு நம்பலாங், குறுங்கப் பேசிந கைத்திடுஞ்சிறு குமரர் தம்மையு நம்பலாங், கடையி லக்கமு மெழுதி விட்டக ணக்கர் தம்மையு நம்பலாங், காக்கை போல்விழி பார்த்திடுங்குடிக் காணி யாளரை நம்பலாம், நடைகு லுக்கியு முகமி னுக்கியு நகைந கைத்திடு மாதரை, நம்பொ ணாதுமெய் நம்பொ ணாதுமெய் நம்பொ ணாதுமெய் காணுமே. (உ௧௧)

அறங்கெடு நிதியுங் குன்று மாவியு மழியுங்காயம்
திறங்கெடு மதியும் போகு நீண்டதோர் நரகிற் சேர்க்கும்

மறங்கெடு மறையோர்மன்னர் வணிகர்நல் லுழவோரென்று
குறங்கெடும் வேசை மாதர் குணங்களை விரும்பி னோர்க்கே.

பொருளொன்று நான்றந்த திவட்கதற்கில் லாமைபிணி பொய்புரட்டு, மருளொன்று கட்காமங் கொலைகளவு சூது வசை மர்ணத் தோடு, மிருளொன்று நரகமின்னு மிவள்பா னுங் கொண்டதற்கோ ரிலக்க முண்டோ, தெருளொன்றும் பாரினைம்போற் சமர்த்தாக்கொண் டெவர்வணிகஞ் செய்ய வல்லார். (உ௱௩)

பசையறவெம் மாவியன்னாள் கைப்பொருளெ லாம்பறிக் கப் பசியா னான்கு, திசைமுகமு நோக்கலாற் றிசைமுகனா னோம்வாயிற் றீயா ளிட்ட, வசையான மண்ணுண்டு மாயனா னோங்கையில் வாங்கு மோட்டா, விசைமேவு மீசனா னோம் புவியி னமையொப்பா ரெவர்தா மம்மா. (உ௱௪)

ஆத்த மனையா ளகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாம
லீச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. (உ௱௫)

அன்னையே யனைய தோழி யறந்தனை வளர்க்கு மாதே, புன்னையோ ருண்மை கேட்பே னுரைதெரிந் துரைத்தல் வேண்டு, மென்னையே புணரு வோர்க ளெனக்குமோ ரின்ப நல்கிப், பொன்னையுங் கொடுத்துப் பாதப் போதினில் வீழ்வ தேனோ. (உ௱௬)

பொம்மெனப் பணைத்து விம்மிப் போர்மதன் மயங்கி வீழுங்
கொம்மைசேர் முலையி னாளே கூறுவே னொன்று கேண்மோ
செம்மையி லறஞ்செய் யாதார் திரவியஞ் சிதற வேண்டி
நம்மையுங் கள்ளுஞ் சூதும் நான் முகன் படைத்தவாறே. ()

மாதரைப்பழித்தல்.

நாணி யென்பதை நாரியென் றுரைத்திடு நகையால்
வேணு வான்று வளைந்துபோய்ப் புகுந்தது வென்றால்
காண லாவதோ ருருவமெய் நாரியைக் கண்டால்
பூணு வார்மயல் காளைய ரென்பது புதிதோ. (௨௱அ)

மாதரிழிவு.

கோளரி யடர்ந்த காட்டிற் குறங்கில்வைத் தமுதமூட்டித்
தோளினிற் றாக்கிவைத்துச் சுமந்துபேறுவ ளர்த்த
ஆளனைக் கிணற்றிற் றள்ளி யழகிலா முடவற் சேர்ந்தாள்
காளநேர் கண்ணி னாரைக் கனவிலு நம்பொணாதே. (௨௱க)

செய்கொண்டா ருங்கமலச் செம்மலு டனேயரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டைச் சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலாம் நாலுவய தாமளவும்
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே. ()

வாலி மடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவுங்
கோலமுடி மன்னர் குறைந்ததுவுஞ்—சால
மதியுடைய நூற்றுருவர் மாண்டதுவு மையோ
சதவிகரத் தால்வந்த தாழ்வு. (௨௧௧)

உண்டதை யொழிக்கும் வாச லோரஞ் ரொழித்து மேலே
வண்டது மழுக்குஞ் சேறு முதிரமு மாறு வாச
லுண்டத னிருப்பைக் கண்டு பெருங்களி யுள்ளங் கொண்டு
கண்டன ரினோரு ரெல்லாங் கதியெனக் கருது வாரே. (உ௧௨)

புண்ணைக்கட்டிக்கொண் டேயதன் மேலொரு
புடவைகட்டிப் புதுமைகள் காட்டிடும்
பெண்ணைக் கட்டிக்கொள் வாரிவர் கொள்ளிவாய்ப்
பேயைக் கட்டிக்கொண் டாலும்பி ழைப்பர்காண்
மண்ணைக் கட்டிக்கொண் டேயழு கின்றவிம்
மடையப் பிள்ளைகள் வாழ்வினை நோக்குங்கால்
கண்ணைக் கட்டிக்கொண் டேர்வழி போங்கிழக்
கழுதை வாழ்விற் கடையென லாகுமே. (உ௧௩)

பிறப்புந் துன்புடையது.

அடுகரி தொடர வீழ வைந்தலை நாகங் காண
விடிகிணற் றறுகின் வேரைப் பற்றிநான் றிடவவ் வேரைக்
கடுகவோ ரெலியும் வந்து கறித்திட வதினின் றேனுக்
கிடைதுளி தேனக் கின்பம் போலுமிப் பிறவி யின்பம். ()

கொண்டு விண்படர் கருடன்வாய்க் கொடுவரி நாகம்
விண்ட நாகத்தின் வாயினில் வெருண்டவன் றேரை
மண்டு தேரையின் வாய்தனி லகப்படு தும்பி
வண்டு தேனுக ரின்பமே மானிட ரின்பம். (உ௧௫)

பெண்சன்மமே துன்பமெனல்.

அல்லலே பெண்ணெனப் பிறந்த லாங்கதி
னல்லலே யிளமையிற் சிறத்த லாங்கதி

னல்லே கட்டழ குடைமை யாங்கதி
னல்லலே யிரவலர் சார்பி ளுகுதல். (௨கசு)

மானுடத்தி னிழிவு.

அரும்பு கோணிடி லதுமணங் குன்றுமோ
கரும்பு கோணிடிற் கட்டியும் பாகுமா
மிரும்பு கோணிடி லியானையை வெல்லலாம்
நரம்பு கோணிடி னுமதற் கென்செய்வோம். (௨கஎ)

யாக்கை நிலையாமை.

பந்தவுடல் வீண்பாடு பட்டவுடல் சீசீதுற்
கந்தவுட லொன்றுக்கா காதவுட—லிந்தவுடல்
வைத்துப்பார்த் தென்ன வலிய வுயிர்மாய்த்துச்
செத்துப்போ னுலுநல்ல தே. (௨கஅ)

கருவினின்று மழிந்தேபோங் கண்டகுழந்தை யினுங்குமரப்
பருவந்தனிலும் போம்யவனப் பருவந்தனிலு மழிந்தேபோ
முருவ நடுங்கு மூப்பதினு மொடுங்கு மெந்தக் காலையினும்
ஒருவி யழித லியல்பாகு முலகத் துடலின் வாழ்க்கையுமே.()

காமாதி யாலுங் கடுவெம் பசியாலுஞ்
சாமாறுந் துன்பமதைச் சாற்றகிலேன்—கோமானே
யெண்சா ணுடம்பாலே பட்டதுய ரென்சொல்கேன்
புண்பாலில் வேனுழைந்தாற் போல். (௨௨௰)

என்புகா லாக விருதோளும் வேயுளா
ஒன்பது வாயினு மூற்றறுத்—துன்பக்
குரம்பை யுடையார் குடிபோக்கு நோக்கிக்
கவர்ந்துண்ணிப் போந்த கழுகு. (௨௨க)

மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்து தூற்றப்பட் டாரல்லா
லெஞ்சினா ரிவ்வுலகத் தில். (உஉஉ)

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (உஉ௩)

இளமை நிலையாமை.

பாலனான பருவம்போம் பன்னுகுமாரப் பருவம்போங்
கோலமான தருணம்போங் கோலையூன்றிக் குனிந்தெழுந்து
காலன்மாய்க்க வனைவர்களுங் கல்லென்றழுது பேர்மாற்றி
யேலப்பிணமென் றொருபெயரிட் டிடுகாட்டிடுத லொருதலையே

இட்டமிகு மிளமைநல மீரையாண் டதனி-லிருபதினில் வளர்ச்சியுமுப் பதுவருடத் தழகு, முட்டகைய மேதையு நாற் பதுவருடந் துட்வி-லொண்பலமு மைம்பதினி லறு பதினிற் றுதுந், திட்டியுமங் கெழுபதினி லெண்பதினிற் செவியுந்-திகழ்மனமுந் தொண்ணூறிற் சிவனுநா றளவில், விட்டகலு மிரவியுதித் தொடுங்குவதென் றுணர்ந்தோர்-வீ ணாள்பட் டொழியாமல் விரும்புவர்நற் றவமே. (உஉ௫)

பணிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனிபுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிந்து. (உஉ௬)

## புல்லர்.

நட்பிடைக் குய்யம் வைத்தார் பிறர்மனை நலத்தைச் செய்வார்
கட்புடைக் காமத் தீயாற் கன்னியை விலக்கி னோரும்
அட்டுட னஞ்சுகின்றோ ராயுளுங் கொண்டு நின்று
குட்டநோய் நரகில் வீழ்ந்து குளிப்பவ ரிவர்கள் கண்டாய். ()

குரங்கு நின்றுகூத் தாடிய கோலத்தைக் கண்டே
யரங்கு முன்னிநாய் பாடிக்கொண் டாடிய வதுபோற்
கரங்க ணீட்டியே பேசிடுங் கசடரைக் கண்டு
சிரங்க ளாட்டியே மெச்சிடு மறிவிலார் செய்கை. (௨௨௮)

தூம்பினிற் புதைத்த கல்லுந் துகளன்றிச் சுடர்கொடாது
பாம்புக்குப் பால்தான் வார்த்துப் பழகினு நன்மை தாரா
வேம்புக்குத் தேன்வார்த் தாலும் வேப்பிலைக் கசப்பு மாறா
தாம்பல நூல்கற் றாலுந் துற்சனர் நல்லோ ராகார். (௨௨௯)

## புல்லரிவரெனல்.

தன்னைத்தான் புகழ்வோருந் தன்குலமே பெரிதெனவே தான்சொல் வோரும், பொன்னைத்தான் றேடியறம் புரியா மற் புதைத்துவைத்துப் பொன்றினோரும், மின்னைப்போல் மனையாளை வீட்டில் வைத்து வேசிசுகம் விரும்புவோரு, மன்னைபிதா பாவலரைப் பகைப்போரு மறிவிலாக்கசடராமே.

மலைநல முள்ளுங் குறவன் பயந்த
விளைநில முள்ளு முழவன்—சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை யுள்ளி விடும். (௨௩௧)

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். (உருஉ)

## புல்லர் குணம்.

குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினி லடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சட் பூசி மிகுமணஞ் செய்தா லுந்தான்
அக்குலம் வேற தாமோ வதன்மணம் புனுகுண் டாமோ
குக்கலே குக்க லல்லாற் குலந்தனிற் பெரிய தாமோ. (உருரு)

வானர மழைதனி னனையத் தூக்கணான்
றானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுங் கல்வியு நவின்ற நூல்களு
மீனருக் குரைத்திடி லிடர தாகுமே. (உருச)

தண்டா மரையி னுடன்பிறந்துந் தண்டே னுகரா மண்டூகம்
வண்டே கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலு மறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடிக் தம்மிற் கலப்பார் கற்றோரே.

நாய்வாலை யளவெடுத்துப் பெருக்கித் தீட்டி னற்றமிழை யெழுதவெழுத் தாணியாமோ, பேய்வாழுஞ் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப் பெரியவிளக் கேற்றிவைத்தால் வீடதாமோ, தாய்வார்த்தை கேளாத சகசண்டிக்கென் சாற்றிடினு முலுத்தகுணந் தவிரமாட்டா, னீவாரை யியவொட்டா னிவனு மீயா னெழுபிறப்பி னுங்கடையா மிவன்பி றப்பே.

கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி யெருப்போட்டுக் கமழ் நீர் பாய்ச்சிப், பொற்பூர வுள்ளியினை விதைத்தாலு மதின்

குணத்தைப் பொருந்தக் காட்டுஞ், சொற்பேதை யர்க்கறி விங் கினிதாக வருமெனவே சொல்லி னாலும், நற்போதம் வாராதாங் கவர்குணமே மேலாக நடக்குந்தானே. (உ௲எ)

பொருட்பாலை விரும்புவர்கள் காமப்பா லிடைமூழ்கிப் புரள்வர் கீர்த்தி, யருட்பாலா மறப்பாலைக் கனவிலுமே விரும் பார்க ளறிவொன்றில்லார், குருப்பாலக் கடவுளர்பால் வேதி யர்பாற் புரவலர்பாற் கொடுக்கக் கோரார், செருப்பாலே யடிப்பவர்க்கு விருப்பாலே கோடி செம்பொன் சேவித்தீவார்.

கதிர்பெறு செந்நெல் வாடக் கார்குலங் கண்டு சென்று
கொதித்திரை கடலிற்பெய்புங் கொள்கைபோற் குவலயத்தே
மதிதனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப்பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலார்க் கீயமாட்டார். ()

கட்டியடிப்பவர்க்குங் கன்மீதி லேற்றுவர்க்கு
மெட்டி யடிப்பவர்க்கு மீவரே—யிட்டமுடன்
பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையின்மேற்
போடுவோர்க் கீவார் பொருள். (உசுடு)

துற்சனன் றனக்குத் தானுந் துரைத்தனங் கொடுத்தா லென்றுஞ், சற்பனை துரோகங் கேடு தானினைத்திடுவா னென் போன், மற்கடந் தானு மாகி வாலிலே தேளுங் கொட்டி, புற் றிடங் கொள்ளி யிந்தா லூரெலாஞ் சுடும்போ லன்றே. ()

கொன்றி லாரைக் கொலச்சொலிக் கூறினோர்
தின்றி லாரைத் தினச்சொலித் தெண்டித்தோர்

பன்றி யாய்ப்படி யிற்பிறந் தேழ்நர
கொன்று வாரா ருணையீ துண்மையே. (உசஉ)

துட்டர்.

கன்மனப் பார்ப்பார் தங்களைப் படைத்துக் காகத்தை யென்செயப் படைத்தாய், துன்மதி வணிகர் தங்களைப் படைத்துச் சோரரை யென்செயப் படைத்தாய், வன்மன வடுகர் தங்களைப் படைத்து வானரமென்செயப் படைத்தாய், நன் மனை தோறும் பெண்களைப் படைத்து நமனையென் செயப் படைத் தனையே. (உசங)

புலியொடு புல்வாய் தானும் பொருந்தியே யுறவானாலு
மெலியொடு பூனை கூடி யிசைந்துநன் குறவா னாலும்
நலமிகு சர்ப்பந் தேரை நன்றதா யுறவா னாலும்
மலமின்மே லவரோ டற்ப மதியின ருறவா காரே. (உசச)

ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சு ணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ. (உசரு)

புல்லருக்குச் செய்த நன்றி.

தேளது தீயில் வீழ்ந்தாற் செத்திடா தெடுத்த பேரை
மீளவே கொடுக்கி னாலே மெய்யுறக் கொட்டலே போ
லேளனம் பேசத் தீங்குற் றிருப்பதை யெதிர்கண் டாலுங்
கோளினர் தமக்கு நன்மை செய்வது குற்ற மாமே. (உசசு)

வல்லியந் தனைக்கண் டஞ்சி மரந்தனி லேறும் வேடன், கொல்லிய பசியைத் தீர்த்தே யிரட்சித்த குரங்கைக் கொன்றான், நல்லவன் றனக்குச் செய்த நலமது மிக்க தாகும், புல்லர்க டமக்குச் செய்தா லுயிர்தனைப் போக்குவாரே. (௨௪௭)

வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்த விடதாரி
யாங்கதனுக் காகார மானாற்போற்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரங்
கல்லின்மே லிட்ட கலம். (௨௪௮)

பொருள் பயனற்றதென்பது.

கோடிபொன் னளிப்ப னின்றே கோடிரோர் மாத்திரைக்கு, ளோடிய கிளைக்கோர் வார்த்தை யுரைத்திடு குவனென்றாலுந், தேடிய காலதூதர் சிமிழ்த்தல்விட் டொழிவரோ சொல், வாடிய மருங்கு னங்காய் மாண்பொருட் பயன் கண்டாயோ. (௨௪௯)

வளநிதி படைத்தோ மென்றும் வடிவிலு ளுடையோமென்று, மளவில்சே யின்றோ மென்று மனுபவத் தமைந்தோமென்று, மிளமையிற் சிறந்தோமென்று மெழினல முடைமுடையோ மென்று, மூளமகிழ் கூர்வர்சற்று முண்மைநாலுணர்ச்சி யில்லார். (௨௫௦)

சயாற்றம்.

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காங்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண். (௨௫௧)

கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா விடுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ—மில்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தா
லேதிலான் றுய்க்கப் படும். (உருஉ)

போருட் பேருமை.

சிவிகைமுன் னூர்தி வேண்டுஞ் செழும்பொருட் செலவு வேண்டுங், குவிகையே வலரும் வேண்டுங் கோலமார்ந் திருக்க வேண்டுங், கவிகைதாங் குநரும் வேண்டுங் கையுறை சிறப்பு வேண்டு, மவிகையில் விளக்கம் வேண்டு மரசவை குறுகுவோர்க்கே. (உருங)

கோதறு கல்வி சாலூர்க் குடியிருந் தறியா னேனு
மோதருஞ் செல்வ மிக்கோ னொருவனே சிறந்தோ னவான்
காதலின் வேத முன்னாங் கலைகள்கற் றுணர்ந்தா னேனு
நீதமை மிடிய னாயிற் சிறந்திடான் வேத்த வைக்கே. (உருச)

பொருணனி யுளனென் றியாரும் புகலுமோர் வார்த்தை வேண்டு, மிருகையுங் கடகம் வேண்டு மிலங்குகுண் டலங்கள் வேண்டும், வருவிர லாழி வேண்டு மார்பிடை மதாணி வேண்டு, முருவமுத் தாரம் வேண்டு முயர்ந்தபட் டாடை வேண்டும். (உருரு)

பொருளிலார்க் கின்பமில்லை புண்ணிய மில்லை யென்று
மருவிய கீர்த்தியில்லை மைந்தரிற் பெருமை யில்லை
கருதிய கருமமில்லை கதிபெற வழியு மில்லை
பெருநிலந் தனிற்சஞ் சாரப் பிரேதமாய்த் திரிகு வாரே. ()

நற்பொரு ளறத்தை யின்ப நலத்தைஞா னத்தைமிக்க
பற்பல ருறவை நட்பைப் பகைதவிர்த் திடுந்திறத்தைச்
சொற்பெரும் புகழை யென்றுந் துகளிலாப் பெருமைதன்னைப்
பொற்புறுங் கதியை யெல்லாம் பொருளலாற் றருவதின்றே()

ஆலிலை பூவுங் காயு மளிதரு பழமு முண்டேற்
சாலவே பட்சியெல்லாந் தன்குடி யென்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திப்பார் கோடி கோடி
யாலிலை யாதி போனா லங்குவந் திருப்பா ருண்டோ. (உருஅ)

ஏரிநீர் நிறைந்த போதங் கிருந்தன பட்சி யெல்லா
மாரிநீர் மறுத்த போதப் பறவையங் கிருப்ப துண்டோ
பாரினை யாளும் வேந்தன் பட்சமு மறந்த போது
யாருமே நிலையில் லாம லவரவ ரேகு வாரே. (உருக)

குணமிருந் தாலுங் குலமிருந் தாலுங் கொழுந்தமிழின்
மணமிருந் தாலு மதியிருந் தாலும் வழுத்தியவங்
கணமிருந் தாலுமோர் காசும்பெ றுதசிங் காரவரைப்
பணமிருந் தாலவர்க் கெல்லாரு மஞ்சலி பண்ணுவரே. (உசுய)

பொன்னொடு மணியுண் டானாற் புலையனுங் கிளைஞரென்று
தன்னையும் புகழ்ந்து கொண்டு சாதியின் மணமுஞ் செய்வர்
மன்னரா யிருந்த பேர்கள் வகைகெட்டுப் போவ ராயின்
பின்னையு மாரோ வென்று பேசுவா ரேசு வாரே. (உசுக)

செல்வ நிலையாமை.

என்பொருளென் பொருளென்று சீவன்விடு மனமே யொன் றியம்பக் கேளாய், யுன்பொருளா னலதன்மே லுன்

ஞாயம் வரைந்துளதோ வுன்ற னோடும், முன்பிறந்து வளர்ந்
ததுகொ லினியுனைவிட் டகலாதோ முதிர்ந்து நீதான், பின்
பிறக்கும் போததுவுங் கூடவிறந் திடுங்கொல்லோ பேசுவாயே

வாழ்வது வந்த போது மனந்தனின் மகிழ வேண்டாந்
தாழ்வது வந்த தானுற் றளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்த தானு லொருவரால் விலக்கப் போமோ
ஏழையா யிருந்தோர் பல்லக் கேறுதல் கண்டி லீரோ. (௨௯௩)

நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டா
லுடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. (௨௯௪)

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக் காற்றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ — டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும். (௨௯௫)

ஆக்கையு மாயிரத்தெட் டண்டங் களுநிலையாத்
தாக்கியழிந் தான்சூரன் சோமேசா — நோக்கியிடில்
நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. (௨௯௬)

## கூடா வொழுக்கம்.

சொல்லுவார் வார்த்தை கேட்டுத் தோழமை யிகழ்வார் புல்லர்
நல்லவர் விசாரி யாமற் செய்வரோ நரிசொற் கேட்டு
வல்லியும் பசுவுங் கூடி மாண்டதோர் கதையைப் போல
புல்லிட ரொருவ ராலே போகுமே யற்பர் நேசம். (௨௯௭)

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண் ணீரு மனைத்து. (உ௬அ)

ஆன்படு நெய்பெய் கலனு ளதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ—தேம்படு
நல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு. (உ௬௯)

தக்காரோ டொன்றித் தமரா யொழுகினோர்
மிக்காரா லென்று சிறியாரைத்—தாந்தேறார்
கொக்கார் வளவய லூரதினை லாமோ
அக்காரஞ் சேர்ந்த மணல். (உ௭0)

ஓரஞ்சொல்லல்.

உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவுங்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் றன்கிளையும்
எச்சமறு மென்று லறு. (உ௭௧)

வழக்குடையா னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரா
லெச்சமறு மென்று லறு. (உ௭உ)

கல்வி யுடையீர் கருங்கான கத்திடையே
நெல்லி யிலைபுதிர்ந்து நிற்பதெவன்—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போன் மாண்டு. (உ௭௩)

ஆரம்பூண்ட மணிமார்பா வயோத்திக் கரசே யண்ணுகேள்
ஈரமிருக்க மரமிருக்க விலைக ளுதிர்ந்த வாறேது
வாரங் கொண்டு வழக்குரைத்து மண்மே னின்று வலிபேசி
ஓரஞ் சொன்னார் குடியதுபோ லுதிர்ந்து கிடக்குந் தம்பியரே

நாரிகள் வழக்க தாயி னடுவறிந் துரைத்தார் சுத்தர்
ஏரிபோற் பெருகி மண்மே லிருசண்ணும் விளங்கி வாழ்வார்
ஓரமே சொல்வா ராகி லோங்கிய கிளையு மாண்டு
நீரவே கண்ணி ரண்டுந் தெரியாமற் போவர் தாமே. (உஎரு)

பகைத்திறம் பேணல்.

மன்னவன் கணக்கன் பார்ப்பான் வலியுள்ளோன் மந்த்ரவாதி
பொன்னுள வன்கு ருக்கள் புலவன்பண் டிதனை மைச்சன்
அன்னஞ்செய் திடுவோ னென்று மடங்காத துட்ட ராமிப்
பன்னிரு பேரோ டென்றும் பகைகன விலுங்கூ டாதே. ()

நந்தி கலம்பகத்தான் மாண்டகதை நாடறியுஞ்
சுந்தரஞ்சேர் தென்குளத்தூர்ச் சோமேசா—சந்ததமும்
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. (உஎஎ)

முயற்சி யுடைமை.

கடவுள் குவனென் றெண்ணிநித் தியமுங் கருதுறு முயற்சிசெய் யானே, லடலுறு செல்வ மடைகுவ னேகொலருங்கலத் திட்டபா லடிசில், மிடலுறு கரத்தா லெடுத்து ணு தெங்ஙன் வீங்கும்வெம் பசிப்பிணி யொழிப்ப, னுடல்பவந் தனக்கோ ராகர மாகு முடனனி வாட்டுமெய்த் தவத்தோய். (உஎஅ)

மானிட னொருவன் றனக்கருஞ் செல்வம் வாய்க்கவென் றனுதின முயற்சி, தானுஞற் றுவனேற் கடவுளு மதனைத் தந்தளிக் குவனதா லன்றே, வானமே ரறிஞர் திருவினை முயற்சி யார்க்குமம் முயற்சியல்லாமே, யீனமா ரின்மை புகுத்திடு மாலென் றியாருநன் குணர்தர நவில்வார். (உ௭சு)

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். (உ௮௰)

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். (உ௮க)

தெய்வத்தா லாவ தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (உ௮உ)

நீங்கரும் பீன்ற நிரள்கா லுளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங்—கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை. (உ௮௩)

சுற்றந்தழுவல்.

பற்றும் வெறுக்கை யொழிந்துழியும் பழமை யெடுத்துப் பாராட்டுஞ், சுற்ற மதனைப் பெருங்கொடையாற் றாயமொழியாற் றழுவலுறி, னற்ற மவனுக் கொருகாலு மணுகா தாக்க மிகப்பெருகு, முற்ற நினைக்கும் பகைவர் தொழின் முற்றுதென்றே யறிந்திடுக. (உ௮௪)

அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கி—பழுமரம்போற்

பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன். (உஅரு)

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள. (உஅசு)

ஆர்வீ டணனே டளவளா வாதரக்கன்
சோர்விலா வாழ்விழந்தான் சோமேசா—நேரே
அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. (உஅஎ)

தீதி லரிட்டங்கள் செய்யவுண வைக்கொள்ள
பேதினியிற் றம்மினத்தை மேவுதலா—னீதிநெறி
போற்றுபுகழ் புன்னைவன பூபாலா வற்றுரை
மாற்றிருமெய் நப்போல் வனே. (உஅஅ)

வலி, காலம், இடம், இவற்றின் போது.

வலியே கால மிடமிவற்றுன் மாற்றான் றனக்கு முனக்கு முள, பலவா நிலையு மவற்குரிய பண்பு மதற்கா மிடையூறும், விலகா ததனை விலக்குவதும் வெல்லு மாறும் வென்றதனு லுலவாப் பயனு மிவையனைத்து மோர்ந்து தெளிந்தே வினை செய்க. (உஅகூ)

யானையைச் சலந்தனி லிழுத்த வக்கரா
பூனையைக் கரைதனிற் பிடிக்கப் போருமோ
தானையுந் தலைவருந் தலம்விட் டேகினுற்
சேனையுஞ் செல்வமுந் தியங்கு வார்களே. (உகூ0)

நிலைதளர்ந் திட்ட போது நீணிலத் துறவு மில்லை
சலமிருந் தகன்றபோது தாமரைக் கருக்கன் கூற்றும்
பலவன மெரியும் போது பற்றதீக் குறவாங் காற்று
மெலிவது விளக்கே யாகின் மீண்டுமக் காற்றே கூற்றும். ()

சங்குவெண் டாம ரைக்குத் தந்தைதா யிரவி தண்ணீ
ரங்கதைக் கொய்து விட்டா லழுகச்செய் தந்நீர் கொல்லுந்
துங்கவண் கரையிற் போட்டாற் சூரியன் காய்ந்து கொல்வான்
றங்களி னிலைமை கெட்டா லிப்படித் தயங்கு வாரே. (உகூஉ)

காலமறிதல்.

மிக்கவலி யோரெனினு மேலவரை வெல்வோர்
தக்கபரு வந்தனைச் சார்வுறவ றிந்தே
யக்கரும முற்றும்வகை யாய்ந்தழிவு றாதே
தொக்கபடை கொண்டமர் தொலைத்திடுவ ரன்றே. ()

வலிமையறிதல்.

வலியவர் தம்மையும் வரம்பின் மிக்குறின்
மெலியவ ராயினும் வென்று போவரா
லுலகினில் வழக்கமீ துணர்ந்து வாழுவன்
கலைபயில் கற்புடைக் காவன் மன்னனே. (உகூச)

தெரிந்து செயல்.

நஞ்சுறை படைகள் கற்று நவையுறு தொன்ன லாரை
வஞ்சினத் தெறியும் வீரர் வளாகக ரதனை மற்றோ
ரிஞ்சியைச் சூழ்ந்து போருக் கெய்தினு மெண்ணி யன்றி
வெஞ்சினத் தினைமேற் கொண்டு விரைந்தமரியற்றல் செல்வர்

குலத்தினை வினவி யுள்ளக் கோளினை வினவி வந்த
நிலத்தினை வினவித் தொல்லோர் நெறியினை வினவிக்கொண்ட
சலத்தினை வினவிப் போர்செய் தானையை வினவி யன்னோர்
வலத்தினை வினவி யல்லான் மற்றொன்று மனங்கொள்வாரோ.

### அமைச்சு.

ஐயறிவுந் தம்மை யடைய வொழுகுதல்
எய்துவ தெய்தாமை முற்காத்தல்—வைகலு
மாறேற்கு மன்னர் நிலையறித லிம்மூன்றுஞ்
சீரேற்ற பேரமைச்சர் கோள். (௨௯௭)

மன்னவர் செவியழன் மடுத்த தாமென
நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்
சொன்னவ ரமைச்சர்க டுணைவர் மேலையோ
ரொன்னலர் விழைந்தவா றுரைக்கின் றார்களே. (௨௯௮)

நனிபயன் பயப்பச் சிறுமுயற் சியினு னலத்தகு வினையு மற் றனைய, வினையினைத் தொடங்குங் காலது தனக்கு வேண்டிய பொருள்களும் படையு, மினிதுறு பொழுது முபாய முஞ் செயலு மிடைப்படு மூறுக ணீக்கித், துனிவற முடிவு போக்கிடு மாறுஞ் சூழ்தர வல்லவ னமைச்சன். (௨௯௯)

### குடிக ளியல்பு.

கொடும்பிறை வடிவிற் செய்த கூனிரும் பங்கை வாங்கி
முடங்குகால் வரிவண் டார்ப்ப முள்ளரைக் கமல நீல
மடங்கவெண் சாலி செந்நெல் வேறுவே றரிந்தீ டாக்கி [வார்
நெடுங்களத் தப்பொற்குன்ற நிரையெனப் பெரும்போர்செய்

கற்றவை களைந்து தூற்றிக் கூப்பியூர்க் காணித் தெய்வ
மற்றவர்க் கற்ற வாறீந் தளவைகண் டாறி லொன்று [ன்று
கொற்றவர் கடமை கொள்ளப் பண்டியிற் கொடுபோய்த் தெ
டுற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினர்க் கூட்டி யுண்பார். ()

அல்லாரு மழையெவர்க்கு மமுதெனினுங் காலமுணர்ந்
தெல்லாரு நலம்பெறச்செய் திடுங்கொல்லோ வொருநிருபன்
பல்லாரு மகிழ்வுறவே பண்ணலசாத் தியமெனலா
னல்லாரன் றேன்செயலை நலமெனக்கொண் டொழுகுவரால்.

அரசு.

மானிலங்கா வலனானவன் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனே. (௱௩)

பரிசனம் பகைவர் கள்வர் படர்தரு முயிர்க டானென்
றுரைசெயைந் திடத்தினாலு முலகிலே யிடையூ றெய்தா
வரிசையிற் காத்து நீதி வழுக்கினோர் தம்மை மொத்திக்
கரிசறப் பொருளுங் கோடல் காவலர் தருமமைந்தா. (௱௪)

வினைவினஞ் சாமை நிற்றல் வினைஞருக் களித்தல் செய்யும்
வினையிடை மனமேற் சேறல் விளங்கிய வறிவு வல்லே
வினையினை முடித்த லாண்மை வெங்கொலை யாதி நீக்கல்
வினைவளர் மான முற்றும் வேந்தருக் கியல்ப தாமே. (௱௫)

மழைவளஞ் சுரக்கு மாறும் வயனிலம் விளையு மாறும்
விழையறம் வளரு மாறும் வேதநூல் விளங்கு மாறுந்

தழைபொரு ளீட்டு மாறுஞ் சமரிடை வெல்லு மாறும்
பிழைதப வாழு மாறம் பிறழ்தரக் கோலி னூதும். (நூாகூ)

பத்திமை சான்ற படையும் பலர்தொகினு
மெத்துணையு மஞ்சா வெயிலரணும்—வைத்தமைந்த
வெண்ணி னுலவா விழுநிதியு மிம்மூன்று
மண்ணாளும் வேந்தர்க் குறப்பு. (நூாஎ)

எந்தவே ளையினு நொந்தவர் துயர்கேட் டிடரிழைப் பவினறனை தேக, மைந்தனே யெனினும் வதைத்திட வொல்கான் மாக்களின் சுகநலமின்றிச், சிந்தனை மற்றோர் பொருளி னிற் செலுத்தான் றீமொழி கனவிலும் புகலான், றந்தை போற் றுய்போ லெவரையுங் காக்குந் தன்மையனே யிறை யன்றோ. (நூாஅ)

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. (நூாகூ)

கொடுங்கோன்மை.

வேலியானது பயிர்தனை மேய்ந்திட விதித்தாற்
காலனானவ னுயிர்தனைக் கவர்ந்திட நினைத்தா
லாலமன்னையர் பாலகர்க் கருத்துவ ரானால்
மேலி தோர்ந்துடன் யார்கொலோ விலக்குவர் வேந்தே

அல்லலை யுடையவ ரழுத கண்ணினீர்
செல்வமன் னவர்கெடத் தேய்க்கும் வாளெனச்
சொல்லிய மொழிசெவித் தொளைச்கு ளேபுக
வில்லையோ வுடற்பய னிழந்த மன்னனே. (நூகக)

கொடியமன் னவர்க்குக் குடிகளே யொன்னார் கோட் டையே யமர்க்கள மவர்த, மடிகடோய் நிலமெங் கணும் படு குழியா மயின்றிடு மன்னரும் விடமாம், நெடியவா சனமே காசன மேடை நிமிருழை யோர்கமன் றாதர் கடிமனை மயா னக் காடெனிற் கொடுங்கோற் காரணருய்யுமா றெவனோ.

கல்லா வரசனுங் காலனுநே ரொக்குங்
கல்லா வரசனிற் காலன்மிக நல்லன்
கல்லா வரச னறமோரான் கொல்லென்பா
னல்லோரைக் கால னணுகில் லானே. (௬௩)

சீடனிலக்கணம்.

மாரியை நோக்கும் வளப்புட் போலும்
பாரியை நோக்கும் பாவலர் போலுங்
கொழுநனை நோக்குங் குலமகள் போலுந்
தேசியை நோக்குஞ் சீடன் றெரிவே. (௬௪)

போலிக்குரு.

வேதவா கமசாத் திரபுரா ணங்கள் விளங்கவே கற்று ணர்ந்த வற்றைத், தீதறவெவர்க்குந் தெளிவுற வோதிச் செப் பிய வந்நெறியதனிற், சாதக மிலாத குருவினை யொருவன் றனடைந் தானந்தம் வினவ, லேதமாங் கழுதை யினைக்குங்கு மந்தி னியல்புகேட் டிடுதல்போலன்றே. (௬௫)

காதிலே குண்டலங்கள் கையிலேசெபமாலை கழுத்தின் மார்பின், மீதிலே தாழ்வடங்கண் மனதிலே கரவடமாய் வேடம் பூண்டோர், வாதிலேபயன்றேடுந் தண்டலைநீ ணெறி

பாரே மனிதர்காணும், போதிலே மௌனியிராப் போதிலே ருத்ராட்சப் பூஜைதானே. (௩௧௬)

### குருத்துரோகம்.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவ
ரத்தமு மாவியு மாண்டொன்றின் மாய்ந்திடுஞ்
சத்திய மீது சதாநந்தி தானே. (௩௧௭)

ஓரெழுத் தொருபொரு ளுணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோ
ரூரிடைச் சுணங்களாய்ப் பிறந்தங்கோருகம்.
பாரிடைக்கிருமியாய்ப் படிவர்மண்ணிலே. (௩௧அ)

### பூசாவிசேடம்.

பூசையில் லாதா னுண்டி புழுப்பிணம் புலையன் கட்டம்
மாசுள பாவ மொக்கும் வானிற் றீயில் வீழ்ந்து
நாசமா வதுவே நன்று நற்குலம் பிறந்தா னேனுந்
தேசுளா ரவனைத் தீண்டிற் றெரிசிக்கி னீனைக்கிற் பாவம்.

### பூசைக்காகாமலர்கள்.

யர்து மீசனுக் கிடமல ராயினு மிழிந்த
போது வீழ்ந்தது மயிர்செறிந் ததுவண்டு பொரும்பூ
தாது நாறிடா ததுவிரி யாதது சைவத்
தோது தூய்மையில் லாதெதன் றேழையு மொழிப்பார். ()

### மாயை.

மாயையே யுடல மாகு மாயையே கரண மாகும்
மாயையே புவன மாகு மாயையே போக மாகும்

மாயையே பொறிக ளாகு மாயையே புலன்க ளாகும்
மாயையே யண்ட பிண்டம் யாவையு மாயை யாமே. (ருஉக)

அழகு.

கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப் பித்துணையா மென்றுரைத்தல்—பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் றன்னேடு
வாட்டானன் றென்றல் வனப்பு. (ருஉஉ)

அரியது.

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானுட ராதலரிது
மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையுந்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. (ருஉரு)

மக்க ளாக்கையிற் பிறத்தலே யரிதுமற் றதிலுந்
துக்க கூன்குரு டூமையைத் துறத்தலு மரிது
நற்கு லத்திடை வருதலு மரிதுஞா னத்தான்
முக்க ணீசனுக் காட்படல் முற்றிலு மரிதே. (ருஉச)

எப்பிறப் பாயினு மேமாப் பொருவதற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—யப்பிறப்பிற்

சுற்றலுங் கற்றவை கேட்டலுங் கேட்டதன்க
ணிற்றலுங் கூடப் பெறின். (௩௨௫)

அருந்தொழி லாற்றும் பகடுந் திருத்திய
பெய்ந்நிறைந்து நீடிருந்த கன்னியும்—நொந்து
நெறிமாறி வந்த விருந்துமிம் மூவர்
பெறுமா றரிய பொருள். (௩௨௬)

எல்லார்க்கு நல்லவ னிக்கில்லை யங்கில்லை யெங்குமில்லை
எல்லார்க்கு நல்லவன் சந்திர னாயினு மேந்திழையார்
எல்லார்க்கு நல்லவ னாயே யிருந்தில னென்றிகழ்வார்
எல்லார்க்கு நல்லவ னீயே புகழ்கச்சி யேகம்பனே. (௩௨௭)

எழுதரிது முன்ன மெழுதியபின் னத்தைப்
பழுதறவா சிப்பரிது பண்பா—முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கா
னிற்பரிது தானன் னிலை. (௩௨௮)

## பெரியது.

பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவன மோநான் முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்
கரிய மாலோ வலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி யங்கையி லடக்கங்
குறுமுனி யோ கலசத்திற் பிறந்தோன்
கலச மோபுவி யிற்சிறு மண்
புவியோ வரவினுக் கொருதலைப் பாரம்

அரவோ வுமையவள் சிறுவிரன் மோதிரம்
உமையோ விறைவர் பாகத்தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கந்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே. (௩உக)

இனியது.

இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளோரைக்
கனவிலு நனவிலுங் காண்பது தானே. (௩௩)

கொடியது.

கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பில்லாப் பெண்டிர்
அதனினும் கொடிது இன்புறவவர்கையி லுண்பதுதானே.

நல்குரவு.

தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை சாற்று மெண் ணங்கள்வா ழிடமாந், தரித்திரம் பற்ப றுக்கமுந் தோ ன்றத் தக்கபே ராகர மென்ப, தரித்திரநன்மை சாலொழுங் கென்னுந் துறைவனந் தனக்கழ றணலாந், தரித்திரங் கொ

டிய வெவற்றினுங் கொடிதத் தகையதை யொழித்தனன் ருமே. (௩௩௨)

தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை யுலர்த்தவாட்டிச், தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்புஞ் சாற்றரு மூலோபத்தை மிகுக்குந், தரித்திரந் தலைவன் றலைவியர்க் கிடையே தடுப்பருங் கலாம்பல விளைக்குந், தரித்திர மவமானம்பொய்பே ராசை தருமிதிற் கொடியதொன் றிலையே.

நிறைபொரு ளுடையவர் நிந்தை சொல்லினு
முறையுறு வழக்கென மொழிந்து போற்றுவர்
வறுமைமிக் குடையவர் வழக்கும் வாய்மொழி
அறமொழி யாகினு மதனை யன்குவர். (௩௩௪)

தாங்கொணு வறுமை வந்தாற் சபைதனிற் செல்ல நாணும்
வேங்கைபோல் வீரங் குன்றும் விருந்தினர் காணிணுணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லருக் கிணக்கஞ் செய்யும்
ஓங்கிய வறிவு குன்று முலகெலாம் பழிக்குந் தானே. (௩௩௫)

ஆவினை மழைபொழிய வில்லம் வீழ வகத்தடியாண் மெய்நோவ வடிமை சாவ, மாவீரம் போகுதென்று விதைகொண் டோட வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ளச், சாவோலை கொண்டொருவ னெதிரே செல்லத் தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக், கோவேந்தருழுதுண்ட பகுதிகேட்க குருக்கள் வந்து தட்சணைக்குக் குறுக்கிட்டாரே.

பெருத்திடுஞ் செல்வம்வந் துற்ற போதுகண்
ணுருத்தெரி யாமலே யொளிம ழுங்கிடு
மருத்துள தோவெனில் வாக டத்திலை
தரித்திர மென்னுமோர் மருந்தீற் றீருமால். (௩௩௭)

தரித்திர மென்பிணி தான்வந் துற்றிடிற்
கருத்தழிந் துண்பதற் கேக லங்குவார்
மருத்துள வோவெனின் மாநி லத்திலை
பொருத்தவொண் செல்வமென் மருந்திற் போகுமே.

தரித்திரத்திற்கேது.

காலை மாலை புறக்கமுங் காரிழை
கோல மேனி குலைந்தபின் கூடலுஞ்
சாலி ராத்தயிர் சாதமோ டுண்டிடில்
மாலோ டாகினு மாது பிரிவளே. (௩௩௯)

இஞ்சி நெல்லி யிலைக்கறி பாகற்காய்
கஞ்சி வெண்டயிர் கங்கு லருந்திடிற்
பிஞ்சி பூமகள் போயுடன் மூத்தவள்
கொஞ்சிக் கொஞ்சிக் குலாவி நடிப்பளே. (௩௪0)

இன்மை.

தன்னுடன் பிறவாத் தம்பி தனைப்பெருந் தாயார்தந்தை
யன்னிய ரிடத்துச் செல்வ மரும்பொருள் வேசை யாசை
மன்னிய வேட்டின் கல்வி மறமனை யாட்டி வாழ்க்கை
யின்னவாங் கரும மெட்டு மிடுக்கத்துக் குதவா வன்றே. ()

குரைகடல் வறுமையுங் குறத்தி யுண்மையும்
நரையற மருந்துதின் றிளமை நண்ணலும்
விரைசெறி குழலினாள் வேசை யாசைபு
மரைசுற வடைவது மஞ்சு மில்லையே. (௱சஉ)

அழிவன.

மூப்பிலாக் குமரி வாழ்க்கை முனையிலா வரசன் வீரங்
காப்பிலா விளைந்த பூமி கரையிலா திருந்தவேரி [ஞான
கோப்பிலான் கொண்ட கோலங் குருவிலான் கொண்ட
மாப்பிலாச் சகடு போல வழியுமென் றுரைக்க லாமே. ()

நிட்டூர மாக நிதிதேடு மன்னவனு
மிட்டதனை மெச்சா விரப்போனும்—முட்டவே
கூசிநிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும். (௱சச)

நம்பப்படாதன.

கல்லாத மாந்தரையுங் கடுங்கோபத் துரைகளையுங் காலந்தேர்ந்து, சொல்லாத வமைச்சரையுந் துயர்க்குதவாத் தேவரையுஞ் சுருதி நூலில், வல்லாவந் தணர்தமையுங் கொண்டவனோ டெந்நாளும் வலது பேசி, நல்லார்போ லருகிருக்கு மனைவியையு மொருநாளு நம்பொணாதே. (௱சரு)

ஐவகைத்தாயார்.

தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி—தன்மனையைப்
பெற்றா ளிவரையே பேசி லெவருக்கும்
நற்றாய ரைன்றே நவில். (௱சசு)

## ஐவகைத் தந்தையர்.

பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பி னுபதேசஞ் செய்தோ—னறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் பகிர்ந்தோன் பயந்தீர்த்தோ
னெஞ்சாப் பிதாக்களென வெண். (௩௪௭)

## தந்தைதாயுரைப்பது தவறப்படாதெனல்.

தந்தையுரை தட்டினவன் றாயுரை யிகழ்ந்தோ
னந்தமுறு தேசிகர்த மாணையை மறந்தோன்
வந்தமுறை வேதநெறி மாறினவ னால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வதுமெய் கண்டீர். ()

## வணங்கவேண்டுபவர்.

இறைவன் சேவகர்க் கெழுத லில்லவட்
கறைகழல் கணவன்மா னாக்கர்க் காரியன்
முறையல மாமர்க்கு மருகன் மூப்பினும்
மறைதரு முறையினால் வணங்கல் வேண்டுமால். (௩௪௯)

## கற்றவர் பெருமை.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னரிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. (௩௫0)

ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை—யந்நாடு

வேற்றுநா டாகா தமவேயா மாயினால்
ஆற்றுணா வேண்டுவ தில். (௩௫௧)

கேள்விமுயல்.

முன்பகவற் கீதை முனியுரைக்கக் கன்னிமரந்
தன்படியே கேட்டுலகிற் றார்வேந்தா—அன்புறல்போல்
மாதவனே புன்னை வனநாதா நன்மையுற
மூதறிவோர் கேள்வி முயல். (௩௫௨)

உணற்கினிய வின்னீர் பிறிதுழியி லென்னுங்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார்—கணக்கினை
முற்றப் பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று. (௩௫௩)

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். (௩௫௪)

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென். (௩௫௫)

இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெ
ழுந்தா லன்றிக், கருதுநிலம் பல்பொருளுங் காண்டலரி தா
முலகிற் கண்போல் யாரும், பெருகியசெல் வமுமறிவும் பெற்
றாலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித், திருவளர்புண் ணிய
பாவ மிம்மைமறு மையும்வீடுந் தெரியா வன்றே. (௩௫௬)

மேன்மக்கள்.

கள்ளார்கள் ளுண்ணூர் கடிவ கடிந்தோரீஇ
வெள்ளிப் பிறனை ரிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற் பொய்கூறூர் வடுவறு காட்சியார்
காயிற் பரிவ திலர். (௩௫௭)

ஒற்கந்தா முற்ற விடத்து முயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்—வற்பத்தால்
தன்மே னலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி. (௩௫௮)

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலு நண்பல்லர் நண்பல்லர்-கெட்டாலு
மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு சுட்டாலுந்
தான்மிக்க வெண்மை தரும். (௩௫௯)

உலகத்தாரியல்பு.

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னொன்று
புகழினு மொக்கப் புகழ்ப—இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்புதைமற் றென்செய்யு
நீர்வழிப் பட்ட புணை. (௩௬0)

உலகத்தா ருள்ளதென்ற துள்ளதா மொலிநீர் வேலை
உலகத்தா ரில்லதென்ற தில்லையா முணருங் காலை
உலகத்தா ருள்ளதென்ற தில்லையென் றுரைக்குமாகின்
உலகத்துக் கவன்பே யாகு முண்மையாற் பயனொன்றில்லை

## பெண்கொடுப்போர் கவனிக்கவேண்டியவை

பெண்ணுதவுங் காலைப் பிதா விரும்பும் வித்தையையே
யெண்ணி றனம்விரும்பு மீன்றதாய்—நண்ணிடையிற்
கூறியநற் சுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகு தான் விரும்பும் பெண். (௩சஉ)

குலம்வேண்டு மென்றிருப்பார் குலத்துள்ளார் கல்வியி னுற்குறையா ஞானப், பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார் பரந்தபெருஞ் செல்வ முள்ள, தலம்வேண்டு மென்றிருப்பார் தாய்மார்க ளெவ்வனமு மழகுஞ் சார்ந்த, நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழ னங்கைமார் நலத்தின் மிக்கார். (௩சந)

## மகட்கொடை செயத்தக்கவர்.

புரைதபு குணனுஞ் சீலமும் வனப்பும் பூரண வாயுளுந் துப்பும், கரையில்விற் பனமும் பாலனம் புரியுங் கருத்தருங் குறைவிலா தாக, விரவுசெல் வமுமா மெண்வகை யுடைய வாடவர் விருப்புறு வண்ணம், பரவிநின் றவர்க்கு மகட்கொடை யுதவல் பகுணிதர் கடமைய தாமால். (௩சச)

## மகட்கொடை செயத்தகாதவர்.

முத்தியில் விருப்ப முடையவன் மிடியன் மூர்க்கன்சேண்டேயத்தி லுள்ளோன், புத்தியில் வயிரம் பொருந்திய சூரன் புதல்விதன் வயதின்மும் மடங்கு, தத்திய வயது ளோனினுர் தமக்குத் தரணியி லொருவரு முள்ளம், நத்திநன் மகளைத் தரத்தகா தென்னுக் கணிதநூ னவின்றிடு மன்றே.

பிறரறியவேண்டியவை.

தகுதிகொள் கடனக் கடன்றனைத் தீர்த்த முன்பொருள் கோடல்பின் பகர்தல், மகளிரைக் கொடுத்தல் தன்னுடை யொழுக்க மரபினிற் புரிந்ததன் பாவம், புகலரு மயலோர் நற்குண மென்னப் புகன்றவிவ் வொன்பது மெவர்க்கு, மிக லற மறையா துரைத்திட லொழுக்கத் தியல்பென மொழிவர் நன் குணர்ந்தோர். (ருசுகூ)

பிறரறியத்தகாதவை.

குருவுப தேச மாதர் கூடிய வின்பந் தன்பால்
மருவிய நியாயங் கல்வி வயதுதான் செய்த தன்ம
மரியமந் திரம்வி சார மாண்மையிங் கிவைக ளெல்லாம்
ஒருவருந் தெரிய வொண்ணா துரைத்திடி லழிந்து போமே.

மந்திரந் தன்னைப் பிறரவ மதித்தல் மகளிரைச் சேர் தல்வருஞ் சனைதன், நந்தலி லாயுள் பிறந்தநா ளில்லி னண்ணிய குற்றநீ ணிதிய, முந்திய கற்பின் மனைவிதன் குணங்கண் மொழிந்தவிவ் வொன்பது மாவி, சிந்தற வரினும் பிறரொடு மொழிதறீ தென வுரைத்தனர் தெளிந்தோர் (ருசுஅ)

இவர்பாவமிவரையடையுமெனல்.

மண்டலத் தோர்கள் செய்த பாவமன் னவரைச் சேருந்
திண்டிறல் மன்னர் செய்த தீங்குமந் திரியைச் சேருந் [ருந்
தொண்டர்கள் செய்ததோடந் தொடர்ந்துதங் குருவைச் சே
தண்டன மொழியாள் செய்த கர்மமுங் கணவற் காமே.

### வருத்திற்பயன்றருவன.

துற்சனரும் பொன்னுந் துடியுந் துரகதமு
மச்சமற முன்னிற்கு மாயிழையும்—நச்சரவுங்
கண்டித்த வெள்ளுங் கரும்பு மிள நீருந்
தண்டித்தார்க் கன்றோ சயம். (௩௭௧)

### தாழ்வறியாதோர்.

மங்கையர் விருந்தினர் வயித்திய ரிரப்போர்
பங்குபிணி யாளரொடு பாலகர் விருத்த
ரங்கமறை வேதியரு மந்தகரு மன்னர்
தங்கள்குறை யால்வருமோர் தாழ்வுமறி யாரே. (௩௭௧)

### மூர்க்கர்.

கழுதை காவெனக் கண்டுநின் றுடிய வலகை
தொழுது மீட்டுமக் கழுதையைத் துதிசெய வதுதான்
பழுதி லாநமக் கார்நிக ராமெனப் பகரும்
முழுது மூடரை மூடர்கொண் டாடிய முறையே. (௩௭௨)

நற்றா மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றார் காமுறுவர்—கற்கிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம். (௩௭௩)

### வைத்தவின்பம்.

கதலி வீரர் களத்திடை வையினுங்
குதலை வாயிற் குழவிகள் வையினும்

மதன லீலையின் மங்கையர் வையினும்
இதமு றச்செவிக் கின்பம் விளையுமே. (௩எச)

கடாவி டுஞ்சமர்க் களத்தினும் மடந்தைய ரிடத்தும்
விடாம லோதிய கவிதைபா ராட்டிய விடத்தும்
நடாவி டுஞ்சிறு பிள்ளைக ணவிலுமவ் விடத்து
மடாமெ னுஞ்சொலை யின்சொலாய் மதிப்பர்கற் றறிந்தோர்.

துன்புறுத்துபவை.

தட்டா ணிடத்திற் றங்கப் பணிகள் சமைப்பதுவும்
வட்டாடு வாரைத் திருத்திநன் மார்க்கத்தில் வைப்பதுவும்
பட்டாங்கு காகிதப் புத்தக மச்சிற் பதிப்பதுவுந்
தொட்டார் மனத்தைப் பலவாறு நாளுந் துயர்செய்யுமே.

பாலுக்குச் சர்க்கரை யில்லை யென்பார்க்கும் பருக்கை யற்ற, கூழுக்குப் போடவுப் பில்லையென் பாருக்குங் குத்தித் தைத்த, காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்குங் கன கதண்டி, மேலுக்குப் பஞ்சணை யில்லையென் பார்க்கும் விசன மொன்றே. (௩எஎ)

தினைத்துணை யுணவயி றிலாத சிற்றெறும்
பினத்தொடு மலையென விருக்கும் யானையுங்
கனத்துறு பசியினாற் கலங்கு கின்றன
மனத்துயர் நீங்கினா ரில்லை மன்னனே. (௩எஅ)

கொல்லவேண்டுவோர்.

கருவினஞ் சாதி தம்மாற் காமரா ருயிரைக் கொல்வோர்
வெருவுறக்கூறை கொள்வோர் மேவியா றலைப்போர் கள்வர்

உருவளர்பிறனில் வேட்போ ரிவர்முத லோரைக் கோறல்
பருவரு பாவமன்று பயிர்களைக் களைதல் போலாம். (௬எசு)

காரியமுடிவில் நன்றிபாராட்டாதோர்.

பிள்ளைதான்வயதின்மூத்தாற் பிதாவின்சொற்புத்திகேளான்
கள்ளினற் குழலாண் மூத்தாற் கணவனைக் கருதிப்பாராள்
தெள்ளற வித்தை கற்றாற் சீடனுங் குருவைத் தேடா
னுள்ளநோய் பிணிக ளுர்ந்தா லுலகர்பண் டிதரைத் தேடார்.

உயிரிழப்போர்.

அரவினை யாட்டு வாரு மருங்களி றூட்டு வாரு
மிரவினிற் றனிப்போ வாரு மேரிநீர் நீந்துவாரும்
விரைசெறி குழலியான வேசையை விரும்பு வாரு
மரசனைப் பகைத்திட் டாரு மாருயி ரிழப்பர் மாதோ.

இதனால் வியாதி யுண்டாமெனல்.

தன்னைத்தான் பேணு தாலுஞ் சரீரத்தின் றண்டிப் பாலும்
பின்னுற்ற விசாரத் தாலும் பின்சல மலத்தினாலு
மன்னத்தை யொறுப்ப தாலு மடைவுடன் முழுக லாலுந்
தன்மதத்தை யிகழ்வ தாலுஞ் சரீரத்தில் வியாதி தோன்றும்

இடும்பைக்கிழியாமை.

வைத்திடுந் தனத்தாற் சேதம் வளர்ந்திடு முயிர்க்குச் சேத
முற்றிடு வியாகூலங்க ளியாவர்க்கு முளதே யென்றும்
புத்திமான் றனக்குத்தானே மனதிலே தேறிக் கொண்டு
சுத்தனாய் நகைத்தானாகிற் றுயரது தோற்கு மன்றே. (௬அ௬)

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும். (௩அச)

இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன். (௩அரு)

## குடையின் விசேடம்.

பகலோன் றெறுகிரணம் பாய்பறவை யெச்சம்
மிகமே லுறுதகற்றும் விண்ணின்—முகிலதினால்
பெய்யுமழை யைத்தடுக்கும் பேரழகு மாமொருவன்
கையிற் குடை யிருந்தக் கால். (௩அசு)

## கைத்தண்டின் விசேடம்.

முனியதட்டு முட்டேக்கு முன்னீ ரளக்குங்
கனியுதிர்க்குங் கவ்வுநாய் காக்குந்—தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் பயந்தீர்க்கும் பாம்படிக்குங்
கைத்தலத்திற் றண்டிருந்தக் கால். (௩அஎ)

## செருப்பின் விசேடம்.

கல்லு முறுத்தாது காலின்முட் டையாது
எல்லைமார்த் தாண்டன்கு டேறாது—தொல்லைவரு
மாலை யிருளில் வழிநடக்கக் கூசாது
காலிற் செருப் பிருந்தக் கால். (௩அஅ)

## சயனமுறைமை.

அன்னத்தின் றாவிகோங் காகு மாசற்குப்
பன்னும் பருத்திதான் பாங்கலவே—அன்னதனுல்

மன்ன னெனும்புன்னை வனநாதா மையிரவிற்
றுன்னிலவம் பஞ்சிற் றுயில். (௩அகூ)

இணையிறனை தில்லிடத்தே கீழ்திசையிற் றலைவைக்க வினிய மாமன், மணிதிகழ்பொன் னெடுமாடத் துறைந்திடி றென் றிசைதனிலே வைக்க வேண்டும், அணிபெறுவேற் றாருறையிற் குடதிசையின் மீதுவைப்ப ரதுவே யன்றி, உணரவிலா துத்தரத்தே தலைவைத்துத் துயில்புரிதலொண்ணு தாமால். (௩கூ0)

நித்திரை யசன மெண்ணெய் நிறைமயிர்ச் சவர நான்கு
முத்தமங் கிழக்கு நன்று மோங்குயிர் வளருந் தெற்கு
சித்தமுங் கலங்கு மேற்குத் தீங்குவந் தடையு மூலை
அத்தமும் வாழ்வுங் கேடா மன்பிலா வடக்குத்தானே. ()

நித்திரைசெய் நேரத்தின்பயன்.

காலைதுயில் சீலம்போங் கண்டபக லாக்கம்போ
மாலைதுயி லோயாம் வகையறிந்து—ஞாலமதிற்
புண்ணியகா லந்தெரிந்தே புன்னை வனநாதா
எண்ணி யனந்தலா டேல். (௩கூ௨)

எண்ணெயிடுநாள்.

ஞாயிறுயிர்க் கீறுதிங்க ளம்பரருள் செய்கிலர்செவ்
வாய்பிணித்துக் கங்குருநாள் வாழ்வுபோம்—தூயவெள்ளி
போடிதெல்லாம் புன்னைவன பூபாலா மிக்கபுத
னோடு சனிநீரா டு. (௩கூ௩)

### போஜன முறைமை.

ஒருபோது யோகியே யொண்டளிர்க்கை மாதே
இருபோது போகியே யென்பர்—திரிபோது
ரோகியே நான்குபோ துண்பா னுடல் விட்டு
போகியே யென்று புகல். (௩௬௪)

### சூது.

தோராத நூற்றுவருந் தோற்றபஞ்ச பாண்டவரும்
பாரே யகன்றுபட்ட பாரதம்பார்—பேராண்மை
வற்றாத புன்னைவன மாகடமேல மிக்கசெல்வம்
பெற்றாலுஞ் சூதுவிரும் பேல். (௩௬௫)

ஐயநீ யாடுதற் கமைந்த சூதுமற்
றெய்துநல் குரவினுக் கியைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கீன்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர். (௩௬௬)

அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கு—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து. (உ௬எ)

உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கு—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றலசூது
பொருவரோ தக்கோர் புரிந்து. (௩௬அ)

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். (௯௰௯)

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார். (௱)

## கள்ளுண்ணல்.

அறிவை யழிக்குஞ் செய லழிக்கு
மழியா மானந் தன்னை யழிக்குஞ்
செறிவு மறிஞர் மதி யாத
செருக்கை விளைக்கு மீன்றாளும்
முறியும் வெறுப்பு மிக விளைக்கு
முனிவு விளைக்கும் பகை யஞ்சாக்
குறிகள் விளைக்கு நகை விளைக்குங்
கொள்ளேல் கள்ளுண் டலை மைந்தா. (௱௧)

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (௱௨)

## களவு.

அரிமுழை நுழைதல் போல வயலகம் புகும்போ தச்சம்
பொருடிரு டும்போ தச்சம் புறப்பட்டே குங்கா லச்சம்
தெருவினி லெவர்க்கு மச்சங் கவர்ந்தன விளைக்க வச்சம்
முருமுருக் கொண்டுகள்வ ருளங்குடி கொண்ட போதும்.

களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும். (௱௩)

### நெஞ்சைப்பழித்தல்

அன்பிலா நெஞ்ச மரும்பிணி யெனவு மளவிலாப் பகை நமக் கெனவுந், துன்பமார் சோக மோகமே முதலாந் துய ரெலாம் விளைநில மெனவு, மின்பமீ டெய்தா திடைக் கிடை யூறு மிருளுமென் றியம்புவர் பெரியோர், துன்பிலா விறைவர்க் கன்பிலா நெஞ்சே துணையிலை துணையிலை யெ னக்கே. (சாரு)

### மனச்சேட்டை இத்தகையதெனல்.

குரங்கனலில் வீழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வ—விரைந்துபேய்
பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தா
லெத்தனைபார் சேட்டைக் கிடம். (சாசு)

### இம்மைச்சொர்க்கம்.

நற்குண முடைய வேந்தை நயந்துசே வித்த லொன்று
பொற்புடைமகளி ரோடு பொருந்தியே வாழ்த லொன்று
பற்பல ரோடு நன்னூல் பகர்ந்துவா சித்த லொன்று
சொற்பெறு மிவைகண் மூன்று மிம்மையிற் சொர்க்கந்தானே

### நம்பிமோசம்போதல்.

சம்புவே யென்ன புத்தி சலந்தனின் மீனை நம்பி
வம்புறு வடத்தைப் போட்டு வானத்தைப் பார்ப்ப தேனோ
அம்புவி மாதே கேளா யரசனை யகல விட்டு
வம்பனைக் கைபிடித்த வாறுபோ லாயிற் றன்றே. (சாஅ)

ஓரியே மீனுவந் தூணு முந்தையோ
நாரியே கண்பிழை நாட்டி யில்லையோ

பாரிய கணவனைப் பழுது செய்தநீ
நீரிலே யிருப்பது நிலைமை யல்லவே. (சாகூ)

கானலை நீரென்றெண்ணிக் கடுவெளி திரியு மான்போல்
வானுறு மிலவுகாத்த மதியிலாக் கிள்ளையேபோற்
றேனினைக் கண்டுதும்பி தியங்கிய தம்மையேபோல்
நானுனை யரசென்றெண்ணி நாளையும் போக்கி னேனே, ()

ஒருபெண்ணைக்கண்டு காமமிகுதியாற் சொல்லியது

ஒருநான்கு மீரரையு மொன்றே கேளா யுண்மையா யையரையு மரையுங் கேட்டேன், இருநான்கு மூன்றுமொரு வொன்றுஞ் சொல்லா யிம்மொழியைக் கேட்டபடி யீந்தாயாயின், பெருநான்கு மறுநான்கும் பெறுவாய் பெண்ணே பின்னையோர் மொழியுரைக்க வேண்டாம் மென்றே, சரிநான்கு பத்துமொரு பதினைந் தாலே சகிக்கமுடி யாதெனக்குச் சகியே மானே. (சாகக)

இதனிலு மிது நன்றெனல்,

பசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாவதே நன்று. (சாகஉ)

படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணி
னிடைதனக்கு நுண்மை வனப்பாம்—நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகர்க்கு
வாடாத வன்கண் வனப்பு. (சாகங)

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்,
உண்ணீ ருண் ணீரென் றுபசரியார் தம்மனையி
லுண்ணாமை கோடி பெறும்,
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்,
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும். (சசச)

இவையில்லாதா ரொன்றுக்கு முதவாரெனல்.

கருதிய நூல் கல்லாதான் மூடனாகுங் கணக்கறிந்து பேசாதான் கசடனாகு, மொருதொழிலு மில்லாதான் முகடியாகு மொன்றுக்கு முதவாதான் சோம்பனாகும், பெரியோர் கண் முன்னின்று மரத்தைப்போலும் பேசாம லிருப்பவனே பேயனாகும், பரிவுசொலித் தழுவினவன் பசப்பனாகும் பசித்தவருக் கிட்டுண்ணான் பாவியாமே. (சசரு)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். (சசசு)

ஆக்குபஞ் சாக்கா மில்லாத நாவுக்கு மன்னை யற்ற
சேய்க்கும் பசியற்ற நோய்த்தி னானுக்குஞ் சீவித்தின்றுப்
பாக்கும்பெண் பாலற்ற நித்திரைக் கும்புதுப் பானை புகும்
ஈக்குஞ் சுகமுமுண் டோவெள்ளை நாவ லிருப்ப வனே. (சசஎ)

அன்போடிடு மன்னமும் அஃதின்றிய வன்னமும்.

கெட்டசாறு தவிடுகஞ்சி கிருமியுண்ட மாவறைக்
கீரைவேர் தெளிந்தமோர் முறிந்தபாகு கிண்டிமா
விட்டசோறு கொழியலுப்பி டாதபுற்கை யாயினு
மெங்குமன்ப தாகவுண்ண வின்பமா யிருக்குமே
பட்டபாகு பசுவினெய் பருப்புமுக்க னிக்குழாம்
பாளிதங்க டாளிதங்கள் பண்ணிகார வகையுட
னட்டபாற் குழம்புகன்ன லமுதமோடு முதவினு
மன்பிலோ டளித்திடாத வசனமென்ன வசனமே. ()

ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் துண்மை பேசி
யுப்பிலாக் கூழிட் டாலு முண்பதே யமிர்த மாகு
முப்பழ மொடுபா லன்ன முகங்கடுத் திடுவா ராகிற்
கப்பிய பசியும் போக்கிக் கடும்பசி நல்கு மம்மா. (௪௧௯)

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே - வீணுக்கெ
னென்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
வன்பிலா ளிட்ட வமுது. (௪௨௰)

விடுகதை.

சீராடை யற்ற வைரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே. ()

கார்படைத்த கரதலத்தான் றுரைதிருவேங் கடமளித்த கன்று வெங்கும், பேர்படைத்த வானந்த ரங்கமகி பாலா நின் பிரம்பூர் நாட்டி, னேரிழைக்கு விழியேழு மூலையாறு காதைந்து நெற்றி நான்கு, பாரிடத்தி லிப்புதுமை கண்டு வந்தே னிதன்பயனைப் பகர்ந்தி டாயே. (௪௨௨)

ஆவியனை யாளையோர் பொழுதுபிரிந் தவளில்ல மணுகுங் காலை, மேவுபாங் கியைக்கண்டாண் டுணையின்றி வருந்தினளோ பின்னு மென்றேன், நாதவினுக் குண்டோகாண் மயிர்ப்பஞ்ச மலப்பஞ்ச நாய்க்கு முண்டோ, தேவிதனக் குண்டோவாண் பஞ்சமென்ற ளதன்பொருளைத் தெரிகிலேனே. ()

முன்னொரு வூரின் பேரா முதலெழுத் தில்லா விட்டால்
நன்னகர் மன்னன் பேரா நடுவெழுத் தில்லா விட்டால்
கன்னமா மிருகத்தின் பேர் கடையெழுத் தில்லா விட்டா
லுன்னிய தேனின் பேரா மூரின்பேர் விளம்பு வீரே. (௪௨௪)

நாலெழுத்துப் பூடு நடுவே நரம்பிருக்குங்
காலுந் தலையுங் கடைச்சாதி—மேலே
யொட்டு முதலெழுத்து யோங்குமூன் றுமெழுத்தும்
விட்டாற் பரமனுக்கு வீடு. (௪௨௫)

கூந்தல்.

முகிலைவென் றறலைக் கடிந்துசை வலத்தை முனிந்து பொற் கடுக்கையை முடுக்கி, அகினறும் புகையுந் தகாமும் புழுகு மளைபனி நீரிலே நனைந்து, பகலவற் குடைந்த வசையினுல் வெள்கிப் பனிமலர்த் தாரணிந் தவனோ, டிகல்

செயக் கருதி யிருடிரண்டாலித் தெழுந்தன செழுந்தடங் குழலாள். (சஉகூ)

கண்.

கடலினைக் கயலைக் கணையைமென் பிணையைக் காவியைக் கருவிள மலரை, வடுவினைக் கொடிய மறலியை வலையை வாளைவென் றறவுநீண் டகன்று, கொடுவினைக் குடிகொண் டிருந்தாவிக் குமிழையுங் குழையையுஞ்சீறி, விடமெனக் கறுப்புற் றரியபரந் தன்கை வேலினுங்கூரிய விழியாள். (சஉஎ)

அலகு வாள்விழி யாயிழை நன்னுதற்
றிலகங் கண்டெதிர் செஞ்சிலை மாரனுங்
கலக மேசெயுங் கண்ணிது வாமென
மலரம் பைந்தையும் வைத்துவ ணங்கினன். (சஉஅ)

தண்டு லாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரைமு கத்தரு கேந்தினள்
கெண்டை கெண்டை யெனக்கரை யேறினள்
கெண்டை காண்கில ணின்று தியங்கினள். (சஉகூ)

பயிர்கடையந் தனவும் பட்டமா மரமும் பண்டைநா ளுக்க வெள்ளென்பு, முயிர்பெறற் பொருட்டுப் பளிதமும் பாலு மொழுகிய தேனுமா ரமுதும், குயிலினின் குரலுங் கிளியி னின் மொழியுங் குழலும்யா ழுங்குழைத் திழைத்து, மயிலியற் சாயல் வாணுத றனக்கு மலரயன் வகுத்ததென் மொழியாள். (சஙூ)

வண்டு மொய்த் தளைய கூந்தன் மதனபண் டாரவல்லி
கெண்டையோ டொத்த கண்ணாள் கிளிமொழி வாயினூறற்
கண்டுசேர்க் கரையோ தேனோ கனியொடு கலந்த பாகோ
வண்டர்மா முனிவர்க் கெல்லா மமுதமென் றளிக்க லாமே.()

காட்சி.

மேகம்பிறைசிலைவேல்குமிழ்வள்ளை வெண்முத்தந்தொண்டை
பூகம்பசுங்கழை தேனுமிழ் காந்தள் பொற் பாலிலை நூல்
நாகங் கதலி யலவன் வரானன் நளினமுண்டு
மாகம் பொழிற்றிருத் தில்லையிலே யொருவல்லியிலே(௪௮௨)

இவர்கட்குத் தரித்திர மெனல்.

கவிகற்ற வர்க்குங் கணிகற்ற வர்க்குங் கம்மாளருக்கு
மொவிகற்ற வர்க்கு முபாத்தி களுக்கு முயர்ந்தமட்டுங்
குவிவைக்கு மொட்டர்க்குங் கூத்தாடி கட்குங் குருக்களுக்கு
மிவரெட்டுப் பேர்கட்கு நீங்காத் தரித்திர மென்றைக்குமே.

கடவுளைப்பேணா ரிவரெனல்.

ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர் தம்மைப்
போற்றா தவர்க்கடை யாளமுண்டே யிந்தப் பூதலத்திற்
சோற்றாவி யற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்றே
யேற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பார்களே. ()

பாம்புசேர் தோளிணையாள் பாலையத்து மாமாரி
சாம்பசிவன் றன்னடியைச் சாரரை—வேம்பி
னிலையை யுடுத்தியவ ரீனமா னம்போக்கித்
தலையில்விளக் கேற்றிவைப்பாள் தான். (௪௮௫)

### உலோபிகள்.

மழவுக்கு மொருபிடிசோ றளிப்பதன்றி யிருபிடியூண் வழங்கி லிங்கே, யுழவுக்கு முதல்குறையு மெனவளர்த்தங் கவற்றையெலா மோகோ பேயின், விழவுக்கும் புலாலுண் ணும் விருந்துக்கு மருந்துக்கு மெலிந்து மாண்டா, ரிழவுக்கு மிடர்கொடுங்கோ லிறைவருக்குங் கொடுத்திழப்ப ரென்னே யென்னே. (௪௩௬)

கல்லாலையமாந் தேவரு மாங் கழுதைக் கசடர் பொதி சுமக்குங், கடாவோ வுழுது பயிரிடற் காங் கட்டம் பன்றிக் கிரை யாகும், புல்லே றீசன் வாகன மாம் பொதியுஞ் சுமக் கும் பிணமெனிலோ, பூசிமுடித்து மறையோர்க்குப் பொ ருளை யீந்து புகழெய்து, மல்லார் குட்டிச் சுவரெனிலோ மாடு மூரஞ்சு மறைவாகு, மதியாத் துடப்பந் தானெனி லோ மாடகூடந் தனை விளக்கு, மல்லா துலுத்தர் தனக்கிணை யா யாரை யுரைப்பேன் புவிமீதி, லவரைக் குறித்துக் கூறு மிடத் தவனுக் கவனே சரிதானே. (௪௩௭)

பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருத்ததங்க
டுருத்திக் கறுசுவை போடுகின்றார் துறந் தோர்தமக்கு
வருத்தி யமுதிட மாட்டா ரவரையிம் மாநிலத்தி
லிருத்திக்கொண் டேயிருந் தாயிறை வாகச்சி யேகம்பனே. ()

ஊனுண்போர்க் கஞ்சி விலங்கு பட்சி முதலியவை பலவிடங்களில் ஒளிந்தனவென்பது.

தேனோடு மூனுண்ணு மானிடர்க் கஞ்சிச் சிவன்கரத்தில்
மானோடிப்புக்க தயங்கோழி யோடின மைந்த னிடம்

மீனோடிப்புக்கன விண்ணினுஞ் சிந்தினும் வெவ்விலங்கும்
வானோடியேபல ராசிகளா யுயிர் வாழ்ந்தனவே. (சங்கூ)

### எவரையும் விதி விடாதெனல்.

இறகெடுத்த வமணர்குலம் வேரறுத்த சொக்கேயீ தென்ன ஞாயம், அறுகெடுத்த சடைமுடிமேன் மண்ணெடுக்க மாட்டாம லடிபட் டையோ. பிறகெடுத்தீர் வளையல் விற்றீர் சொற்கேளாப் பிள்ளைகளைப் பெற்ற தோடம், விறகெடுத்தீ ரென்செய்வீர் விதிவசந்தா னியாவரையும் விடாது தானே.

சந்திரனுக் குடலூனந் தனதனக்கோர் கண்ணூனந் தருவி னீழ, லிந்திரர்க்கோ பகக்குறியா மியமனுக்கோ புழுக்காலா மிரவி யீன்ற, மைந்தனுக்கோ கான்முடமாம் வனசனுக்கோர் தலைகுறையாம் வரலா றீதேல், பந்தமுள மானிடரை விதிவிடுமோ வாலவாய்ப் பதியுளானே. (சசக)

விதியினால் வருவதல்லால் வேதத்தோர் தங்கண்
மதியினால் வாழ்வதொன் றில்லைப்—பதிதோறுஞ்
சங்கரனு மையமெடுத் துண்டான் றடங்கடல்சூழ்
மங்கையுடன் காடுறைந்தான் மால். (சசஉ)

### அடியார் பொருளைக் கவராமை.

அந்தோ புரமெரித்த வண்ணலடி யார்பொருள்கள்
செந்தீயி னுங்கொடிய தீக்கண்டாய்—செந்தீயை
நீங்கிற் சுடாதே நெடுந்தூரஞ் சென்றாலு
மோங்கச் சுடுமே யிது. (சசங)

### உத்தம, மத்திம, அதமர், செய்கை.

சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலா மாவைப் பாதிரியைப் பார் (௪௪௪)

உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரு
மாங்கமுகு போல்வா ரதம ரவர்களே
தேங்கதலி யும்போல்வார் தேர். (௪௪௫)

### தெய்வச்செயல்.

கனத்தபுகழ் படைத்தபெருங் காவலன்றன் மகடனது கணவனோடே, சினத்ததிக வெறுப்பாகிச் சிவனைப்போக்கிட வுன்னிச் சென்றுகானி, வினத்தடியா லடியிருக்க மத்தளமே வேறும்பணிவ னினிமை கேட்டே, கனத்தகிளை தனிற் கயிற்றை மாட்டியவ னுயிர்விடுத்த கதை கேளீரோ. (௪௪௬)

மானென்று வடிவெடுத்து மாரீசன் போய்மடிந்தான் மானே யென்று, தேனென்று மொழிபேசிச் சீதைதனைச் சிறையிருக்கத் திருடிச்சென்றோன், வானென்று மரசிழந்தான் தண்டலையார் திருவுளத்தின் மகிமைகாணீர், தானொன்று நினைக்கையிலே தெய்வமொன்று நினைப்பதுவுஞ் சகசந்தானே.

ஆதியா மிருவர் கட்புக் கவமதிப் புற்ற வர்க்குச்
சூதினாற் கபடஞ் செய்து துணைபிரிந் திடுவ ரென்றார்
வேதியன் பவன வாயில் வேசைதாய் பச்சைநாவி
யூதிய கதைபோ லாகி யுறுநர தெய்துவாரே. (௪௪௮)

மதியிலா மறையோன் மன்னன் மடந்தையை வேட்கை யாலே, ருதுவது காலந்தன்னிற் றேடமென் றுரைத்தே யாற்றிற், புதுமையா யெடுத்தபோது பெட்டியிற் புலிவா யாலே, யதிருடன் கடியுண் டன்றே வாருயிர் துறந்தான் மாதோ. (௪௪௯)

கூரந்தொருவன் கணைதொடுக்க மேற்பறக்கும் ராசாளி கருத்துங் கண்டே, யுரந்து சிறு கானகந்தி லுயிர்ப்புறாப் பேடுதனக் குரைக்குங் காலை, விரைந்தவிடந் தீண்டவுயிர் விடும் வேடன் கணையால்வல் லூறும் வீழ்ந்த, தான்செயலே யாவதல்லாற் றன்செயலா லாவதுண்டோ வறிவுள்ளோரே.

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல். (௪௫௧)

சயவர் களிப்பு.

உண்டாயிருந்து முதவிகொள்ளாத வுறவும் பொன்னை
யெண்ணாக் கணிகையு மின்புல வோருநல் லேவலருந்
தண்ணாரம்புல்லருந் தாமாவுங் காலுண்ணுஞ் சற்குருவுங்
கண்ணாரக்காணின் மகிழ்வார்கள் செல்வக் கயவர்களே. ()

அறிவின்விசேடம்.

புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தி யற்றா
லெத்தனை விதத்தினாலு மிடாது வந்தே தீரும்,
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
யுற்றதோர் கிணற்றிற் சாயல் காட்டிய வுவமையே போல். ()

பொருள்களின் சிறப்புப் புல்லாறியா ரெனல்.

ஞான மென்பது மணங்கமழ் பொருளது நாவிலுண் பதுவோ சொ, லூனு ணங்குவேன் மடந்தைய ரணிவது வுயர்முலைத் தடங்கோட்டி, லானதங்கது பூசினால் வீங்குவ தமையுமோ வெனக்கேட்பக், கானவேட்டுவச் சேரிவிட்டகன் றனர் கடிகமழ் விலைவாணர். (சருசு)

செல்வச்சிறப்பு.

செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லன
தான மறவாத தன்மையரே லஃதென்பர்
வானகத்து வைப்பதோர் வைப்பு. (சருரு)

உயிருள்ளவரைக்குங் கொடாதோர்.

கற்புடை மாதர் கொங்கை கவரிமான் மயிரின்கற்றை
வெற்புறு வேங்கை யின்றோல் வீரன்கை வெய்ய கூர்வே
லற்பர்தம் பொருள்க டாமு மவரவ ரிறந்தபின்னே
பற்பலர் கொள்வா ரிந்தப் பாரினி லுண்மை தானே. (சருசா)

இல்லறதரும மறியாப் பெண்டீர்,

உற்றவரா யிருந்தாலும் விருந்தா வந்தா
லொருவேளை நீராதி ரண்டு வேளை
மற்றதற்கு மேலிருந்தான் முணக்கங் காணும்
மண்ணில்விரற் கடைபதியும் வீடு வாசல்
பெற்றதொரு சிறுவருக்கு மடி தப்பாது
பெட்டியுஞ் சட்டியுமிரண்டு மோதிக்கொள்ளுஞ்
சற்றிதுகண் டறிந்தங்கே விலாகா ராகிற்
சட்டிமுட்டி பானையெல்லாந் தகர்ந்துபோமே. (சருஎ)

### பேதமிலாரிவரெனல்.

கற்றவர்க்கும் நலனிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
யுற்றவர்க்கும் வீரரென் றுயர்ந்தவர்க்கு முலகையாள்
கொற்றவர்க்கு முண்மையான கோதில்ஞான சரிதராம்
நற்றவர்க்கு மொன்றுசாதி நன்மை தீமையில்லையே. (௬௫அ)

### அப்பரிடத்திற் சேர்ந்தபொருள் பெருமையடையாது.

வீணர்பூண் டாலுந் தங்கம் வெறும்பொய்யா மேற்பூச்
சென்பார், பூணுவார் தராப்பூண் டாலும் பொருந்திய தங்க
மென்பார், காணவே பனைக்கீ ழான்பாற் குடிக்கினுங் கள்ளே
யென்பார், மாணுல கத்தோர் புல்லர் வழங்குரை மெய்யென்
பாரே. (௬௫௯)

### இன்னதுசெய்தால் இன்னது விளையுமெனல்.

ஆசாரஞ் செய்வா ராகி லறிவொடு புகழுமுண்டாம்
ஆசார நன்மை யாலு லவனியிற் றேவ ராவர்
ஆசாரஞ் செய்யா ராகி லறிவொடு புகழுமற்றுப்
பேசார்போற் பேச்சு மாகப் பிணியொடு நரகில் வீழ்வார். ( )

### வண்ணானைப் புகழ்தல்.

சிரம்பார்த்தா னீசனயன் றேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ண—னுரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணானசீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு. (௬௬௧)

### புருடராவார் செய்யத்தக்கவை.

பண்புளருக் கோர்பறவை பாவத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கா லோற்காலி—திண்புவியை

யாள்வார் மதுரை யழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனநன் னிலம். (௪௬௨)

### முத்தேவர் உணவு முதலியன.

சிறுவ னளைபுயலு செந்நெற் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநாற்—பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றூழும் பூவே கறி. (௪௬௩)

### துர்ஜனம்.

நிலமதிற் குணவான் றோன்றி னீள்குடித் தனரும் வாழ்வார்
தலமெலாம் வாசந் தோன்றுஞ் சந்தன மரத்திற் கொப்பாம்
நலமிலாக் கயவன் றோன்றி னற்குடித் தேசம் பாழாங்
குலமெலாம் பழுது செய்யுங் கோடரிக் காம்பு நேராம். ()

### முற்பிறப்புகளின் வினைத்திறமுணர்தல்.

இறந்த பிறப்பிற்றுஞ் செய்த வினையைப்
பிறந்த பிறப்பா லறிக—பிறந்திருந்து
செய்யும் வினையா லறிக வினிப்பிறந்
தெய்தும் வினையின் பயன். (௪௬௫)

### ஊனுடம்பு புகழுடம்புகளின் விசேடம்.

ஒருவனே யிரண்டு யாக்கை யுறுகுவ னவையா வென்னி
லுருவமும் புகழு மாகு மதற்குணீ யின்பமுற்று
மருவிய யாக்கை யிங்கே மாய்ந்திடு மற்றை யாக்கை
திரமதா யுலக மேறிச் சிறந்துபின் னிற்கு மன்றே. (௪௬௬)

### கோயில் வலம்வரும் விதி.

கையசை யாதெ மூத்தோ ரைந்தன்றிக் கருதிடாது
பையவீ ரடிக்கு நாப்ப ணோரடிப் பரப்பே றாது
செய்யசூ லகட்டின் முற்றிச் செல்கின்ற செல்வ மாதர்
தொய்யடி நடையிற் சூழும் வலத்தினார் முத்தி சேர்வார். ()

### கடவுளைவணங்காஅவயவங்களில்தலை.

வீட்டுத் தலைவனின் றாள்வணங் காத்தம் விரி தலைசும்
மாட்டுத் தலைபட்டி மாட்டுத்தலைபுன் வராகத்தலை
யாட்டுத் தலைவெறி நாய்த்தலை பாம்பி னடுத்தலைகற்
பூட்டுத் தலைவெம் புலைத்தலை நாற்றப் புழுத்தலையே. (௪௱௮)

### கண்.

தெண்ணீர் முடியனைக் காணார்தங் கண்ணிருள் சேர் குருட்டுக், கண்ணீர் சொரிந்தகண் காசக்கண் புன்முலைக் கண் ணாகக்கண், புண்ணீ ரொழுகுங் கொடுங்கண் பொருமைக் கண் புன்கண் வன்கண், மண்ணீர் மையுற்ற கண் மாமணிநீத் தகண் மாலைக்கண்ணே. (௪௱௧)

### செவி.

கண்ணுத லான்புகழ் கேளார் செவிபொய்க் கதையொலியும்
மண்ணுற மாதரு மைந்தருங் கூடி யழுமொலியுந் [மொத்
துண்ணெனுந் தீச்சொல் லொலியும்வ் வந்தகன் றூதர்கண்
துண்ணுற வாவென் றரப்பொலி யும்புகு மூஞ்செவியே. ()

### வாய்.

டணிகொண்ட கண்டனை வாழ்த்தார் வாய்த் தெரு மண்

றுண்ட வாய், பிணிகொண்டவாய் விடப் பிச்சுண்ட வாய் வாரும் பேச்சற்றவாய், துணிகொண்டவா யனற் சூடுண்டவாய் மலஞ் சோர்ந்திழிவாய், குணிகொண்ட வுப்பிலிக் கூழுண்ட வாயெனக் கூறுபவே. (சஎக)

## பத்தியிலையேனின் முத்தியிலையென்பது.

சாத்திர முணர்ந்தானேனுஞ் சதுர்மறை யோர்ந்தானேனுங்
கோத்திரமுயர்ந்தானேனுங் குலமதிற் சிறந்தானேனுங்
நேத்திரமூன்று கொண்ட நிருமலன் கருணைக்கேசற்
பாத்திர னில்லானாகிற் பரன்பதமடையா னன்றே. (சஎஉ)

## இவர்களோடிவையழியு மெனல்.

தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோஞ்
சேயோடு தான்பெற்ற செல்வம்போந்—தூயவுடல்
வந்தோன் மரிக்கில் வலிபோ மனையெனிலோ
அந்தோ வினைவயெல்லாம் போம். (சஎங)

## பசியின்கொடுமை.

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம். (சஎச)

## பழக்கம்.

சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்க நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம். (சஎரு)

## நன்றி மறவாமை.

சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வ
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா
உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாயமுண்டோ

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. (சஎஎ)

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (சஎஅ)

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (சஎகூ)

உண்டா ரெல்லா முயிர்காத்துக் கோத்திரத்தி
லெந்நாளும் வாழ்ந்தே யிருப்பதினால்—பன்னாளும்
பூதலத்தின் மேன்மைபெறு புன்னைவன நாதனே
ஏதிகழ்ந்து நன்றிமற வேல். (சஅய)

## தமிழ்மேற் சலித்துக் கூறியது.

அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக்கல்வி
யதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில்லாமல்
திடமுளமோ கனமாடக் கழைக்கூத்தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோமில்லை
தடமுலைவே சையாகப் பிறந்தோமில்லை
சனியான தமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்னசென்ம மெடுத்துலகி லிருக்கின்றோமே. (சஅக)

### தமிழை நன்குணரா புலவரையும் பூமானையும் இழிவாய்க் கூறியது.

குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங்கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்துதோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை
யிரண்டொன்றாய் முடிந்துதலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே. (சஅஉ)

### முனிவ ரொப்பவர் புலவர்.

போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடில்
தூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் வன்கணு ளரிற்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே. (சஅரு)

### இன்னதற் கின்ன தழகெனல்.

ஊசிக்கழகு முனைமழுங்காமை யுயர்ந்தபர
தேசிக்கழகுந் திரியமடக்கற் றிரண்மலைசேர்
வேசிக்கழகின் னிசைபலநூல்கற்ற வித்வசனர்
நாசிக்கழகு பொடியெனச் சொல்லுவர் நாவலரே. ()

### யாவர்க்குமிது பொதுவெனல்.

ஆறுகுளந் தோப்பு மணிநியமஞ் சத்திரமுங்
கூறுவழித் தாறுநிழல் கோட்டமுடன்—பாறுமன

வேசிசபை நீர்ப்பந்தல் வேந்தன் மடமயிலே
காசினிக்குள் ளேபொதுவாங் காண். (சஅரு)

பெண்ணாசை யொழித்தல்.

மங்கையர்க ளங்கமிசை வைத்திருக்கு மாசையினைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்—கங்கைமதி
வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாங் காணுக் கதி. (சஅசு)

பாலனைப் பழித்தல்.

அரும்பால காமுனம் பூமணஞ் சொற்பொரு ளாகமுயிர் [ரைப்
கரும்பாஞ் சுவையெள்ளு மெண்ணெயும் போலொத்த காதல
பெரும்பாவி னல்லன்னங் கங்கா சலத்தைப் பிரிப்பதுபோல்
சுரும்பாம் புலவர் யமனாலே செக்கெனத் தோன்றினையே. ()

பாண்டியன் ருானேன் பசலைமுகிற் பாலானே
ஞண்டிகையி லேந்தியதொன் ருனேனே—வேண்டியபோ
துள்ளங்கைத் தேனானே ஞேர்மதலை பூத்தபின்பு
உள்ளங்கைத் தேனு னுனக்கு. (சஅஅ)

பாண்டியன் மாலைகண் டாய்மக ளோநினைப் பார்த்தவர்க்கு
வேண்டிய வின்ப மிகவரு மோவெண்ணெ யேதிருடித்
தாண்டிக் குதித்தநற் கோதண்ட ராமன் றடவரைமே
லாண்டி யிருப்பிடந் தாத னிருப்பிட மானபின்னே. (சஅகூ)

அரும்பாக்கியகொங்கைபாலாக்கியுமுங்களப்பநெஞ்சை [யைக்
யிரும்பாக்கி யென்னெஞ்சைப் பித்தனாயாக்கியவ் வேந்திழை

கரும்பாக்கியென்னையும்வேம்பாக்கியிவ்வண்ணங்கண்டனையே
பெரும்பாக்கிய மல்லவோ மகனேயுனைப் பெற்றதுவே. (சகூ௦)

கேளந்த நாளையின் மைந்தாநின் னையரைக் கிட்டிமத
வேள்வந்து பூச விடமதி காய வெருண்டெனது
தாள்வந்து பற்றிமுன் வாய்புதைத்தேநின்று தாழ்மைசொன்ன
நாளந்த நாளல்ல வேயிந்த நாளந்த நாயகற்கே. (சகூக)

மாலாக்கி யென்னைப் பெருவயி றாக்கியென் மார்பின்மலை
பாலாக்கி யங்கம் பசுநரம் பாக்கியப் பாவையரை
மேலாக்கிச் சிக்கு விளக்கெண்ணெ யாக்கியென் மேனியெங்குந்
தோலாக்க வோமக னேபிள்ளை யாய்வந்து தோன்றினையே.()

## வெறி விலக்கல்.

வண்டுறை சோலைத் தணிகை மருத்துவன் வந்திடினுங்
கண்டு படாதவிக் காமச் சுரம்விடு மாயிழைக்குப்
பண்டு பழகினர் போலிந்த வேளையிற் பாயசத்தைக்
கொண்டுவந் தீரிநிற் றோடம் பிறந்திடுங் கோதையரே.(சகூ௩)

கொம்மைசேர் மின்னுள் கொடுந்துயர்கொண் டாலதற்குச்
செம்மைகெட நீநினைத்தாற் றீருமோ—தம்மை
அடுத்தவரைக் காத்தருளு மம்பலவா முத்தி
கொடுத்தருளத் தீருங் குணம். (சகூச)

பொன்பிதிரு மெண்சுணங்கு பூத்திலகு கும்பதன
மின்பொருவ நூன்மருங்குன் மெல்லியற்குத்—தென்புலியூர்
அல்லமையுங் கண்டர்செய லன்றி யொருவருடை
வல்லமையிற் றீராது மால். (சகூரு)

வண்டாங்கிசைபயின் மாலையன்வேலப்பன் மைந்தனிதி [னே
கொண்டான்கிளையை வளர்த்தான்குழந்தைக் குவட்டின்மின்
பண்டாங்கிசையினண் மால்கொண்டுபோம்பன் குளத்தினடுக்
கண்டாங்கியைக்கிழித் தாலென்னபாவங் கருதுவதே.(௪௯௯)

அணியார் கடுக்கை நறுந்தும்பைகங்கை யறுகுடனே
பணியார் சடாடவிக் கச்சாலைநாதர் பனிவரையில்
தணியாத மாமதப் பேய்பிடித்தாடுமித் தையலுக்கு
மணியாட்டி னால்விடு மோசொல்லு வீரிந்த மாநிலத்தே. ()

சுரம்போக்கு.

பூச்சிலைக்கன்னற்கைச் சேஷாசலேந்த்ரன் பொருப்பிடத்தே
காச்சியபாலைக் குடிபோவென்றேனந்தக் காரிகையும்
பேச்சிலெத்துக்கள்ளிமுன்கைகைராமற்குப்பின்சொன்னதாய்
வாய்ச்சுதென்றேநடந் தாள்பாலைபான வனந்தனிலே.(௪௯௮)

எறிக்குமதிச்சடை யண்ணாமலைய ரெழிற்கிரியில்
பறிக்கின்றபூவை மிதிக்கப்பொறாளந்தப் பாதத்தினால்
பொறிக்கண்பிசாசுக ணெறகளைத்தாவிப் பொரிபொரித்துக்
கொறிக்கின்றபாலையி லெப்படிப்போயினள் கோமளமே. ()

நாணிக்கண்புதைத்தல்.

தேனேர் தமிழ்வெங்கடேசுரட் டேந்திர தீரன்வரை
மானேயரிய புதுக்கோட்டை யுற்றிடு மாறுகவி
தானே புரிந்தனை யங்கேந்தலையுந் தரிசிக்கச்செய்
நானேசமான விதம்பெறு வேன்கவி நாப்புகழ்ந்தே. (௫௰)

மாகம்பனன்ன தமிழாகரனுயர் வர்த்த கசை
யோகம்பயிலு மிலாபனப்பாஜி யொருவரை மேல்
வாகம்பங் கைவிடிற் கூடலூரோடு மலையளமுந்
தாகம்புரிந்தர சாட்சிசெய் வேனடி தாழ்குழலே. (௱௩)

காமவருத்தம்.

சங்க முழங்குந் தமிழ்நாடன் றன்னை நினைந்த போதெல்லாம்
பொங்குங் கடலு முறங்காது பொழுதோர் நாளும் விடியாது
திங்களுறங்கும் புள்ளுறங்குந் தென்ற லுறங்குஞ் சிலகாலம்
எங்கு முறங்கு மிராக்கால மென்க ணிரண்டு முறங்காதே. (௱௪)

காமத்தால் வருங்கேடு.

காமமே குலத்தினையு நலத்தினையுங் கெடுக்கவந்த களங்கமாகுங், காமமே தரித்திரங்க ளனைத்தினையும் புகட்டிவைக்குங் கடாரமாகுங், காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்குங் கபாட மாகுங், காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங் கத்தி தானே. (௱௫)

பகையுறவுகள் தன்னையன்றி வேறில்லையெனல்.

தானே தனக்குப் பகைவனு நட்டானுந்
தானே தனக்கு மறுமையு மிம்மையுந்
தானேதான் செய்த வினைப்பயன் றுய்த்தலாற்
றானே தனக்குச் சரி. (௱௬)

புலவருக்கு வேண்டுவன.

தேயாத் செருப்புமொரு பயனும் வேண்டுஞ்
சென்றிருக்க விடம்வேண்டுந் திரியவென்றால்

நையாத கால்வேண்டு முண்ணுஞ் சோற்றி
னுருசிகெட்ட நாவேண்டு முலுத்தர்தம்மைக்
காயாத மனம்வேண்டும் பொறுமை வேண்டுங்
கசடருக்கு வசையுரைத்துக் காட்டல்வேண்டுந்
தாயாகப் புலவருக்கித் தனையுண் டானாற்
றரணியெங்குஞ் சஞ்சரிக்கத் தரங்கண்டாயே. ()

மாதர்கொடுமை.

மனைவியின்பாற் பட்டசனத் தாலேவந்த
வருத்தமதைச் சிவனிடம்போ யுரைத்தேனப்போ
தெனையவரு மருகிருத்தி யப்பா வென்ற
னியன்மனையா ளாருக்கு மடங்காநீலி
அனைவர்களுஞ் சிரிக்கவெள்ளைச் சபையிலேற்றி
யலக்கழித்தா ளரையுடம்பாய் மெலிந்தேன்பின்னும்
வினைவலியால் நடுக்கங்கொண் டிருக்கின்றேனென்
மெலிவையுரன் மத்தளம்பால் விளம்பும்வாறே (௱௬)

ஆகினுநீ நமைவேண்டி வந்தா யிந்த
அகக்கலியோ பெண்டுகண்மூப் பானகாலம்
வேகமுடன் சட்டிவரு வதற்குமுன்னே
மேவுதலை சாய்த்துவிட வேண்டுந்தம்பி
பாகமுடன் சண்டிகைக்குக் கணவன் சொன்ன
பக்குவம்போ லுன்மனைவிக் கிதங்கள்பேசி
தாகமுடன் சாடைகண்டு நோக்கம் பார்த்துத்
தந்திரமா யுன்காலந் தள்ளுவாயே. (௱௭)

### மூடர்பால் கவிசொல்லாமை.

கல்லாத மூடர்கள்பாற் கவியுரைக்கிற் கற்பனைசொற் கனிவின் சார, மெல்லாநன் கறிவரா வறியாதார்க் குரைத் தல்கமரினிலே பாலை, யில்லாமற் கவிழ்த்தொக்கு மென் பாதுரீ யறியாயா வின்பாச் சொல்ல, வல்லார்கின் பாலன்றி யெவர்க்குரைப்பார் பழனிக்கு மாரவேளே. (௱௭௮)

### பத்து ஊர்களின் பெயர் வந்தன காண்க.

குலநலங்கற் பினிற்குன்றாக் குடிபிறந்தாள் காரைக்
குடிவைத்த குழற்றேவி கோட்டையனை மூகிலான்
நலமிகுங் கோவிலூ ரம்பனையா னைங்கா
நாடுகாத் தார்ன்றேவி நான்கண்ட தேவி
இலகுமம ராவதியி லிருந்தமினு ரெவரு
மிச்சிக்கும் பேரழகா புரிகருணை யிவள்பால்
உலகுபுகழ் முறைசைநக ருளதருமை துரையே.
ஓங்குபுயச் சண்முகநல் லுதாரகுண மாலே, (௱௭௯)

### ஆறு நகர் பெயர்கள் வந்தன காண்க.

இராமே சுரஞ்சென்ற தின்னமுநற்பல னெய்த வந்தும்
வாராமே திருக்கஞ்சி வாய்புகக் கொண்டு மதுரையினை
சாராமேவு பித்தர் மையிலையென் றேசொலத் தக்கதின்றி
விராவப் பொருந்தில்லை மேவிநின் றேன்செந்தில் வேலரசே.

### பதினைந்து பலகாரப்பெயர்கள் வந்தன காண்க.

தேங்குழலைப் பங்தோசை யித்தியமா வுடலிற்
றிகழ்வடையப் பழம்பணியா ரங்களெலா நீத்தே

ஓங்கியழு தலட்டுபல காரமுள வனைமார்க்
கொடுங்கிப்பா யசமனைய வுற்றார்க்கு மஞ்சி
வீங்கிபக்கோ டாமலையிற் பூந்தினவு கொண்டுன்
விரகத்தி லதிரசமுற் றன்பிட்டு வந்தாள்
தாங்குதனின் கடன்செந்தில் வேலரசே யவனின்
றன்பாற்சேருதல்சீரைத் தரு முருக்குத் தானே. ()

இங்கிதம்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ
பயிலியது கேழ் இய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே. (௫௯௨)

சங்கரன் றேவி தமயன் மனைவி தனக்கு முன்னும்
மங்கைய ரேறிய வாகனங் காணுமற் றங்கவளோ
கொங்கைக ளீரைந் துடையவ ளாயிக் குவலயத்தில்
எங்குந் திரிகின்ற வைரவ ரூர் தியென் றேநினையே. (௫௯௩)

அரவிந்த நண்பன் சுதன்றம்பி மைத்துன னண்ணன்கையில்
வரமுந்தி யாயுதம் பூண்டவன் காணுமற் றங்கவனோ
பரமன் றிகிரியை யேந்தினன் மைந்தன் பகைவன் வெற்பை
உரமென் றெடுத்தவன் மாற்றான்றன் சேவக னெண்டொடியே.

கொல்லுலை வேற்க யற்கண் கொவ்வையங் கனிவாய் மாதே
நல்லணி மெய்யிற் பூண்டு நாசிகா பரணமீதில்
சொல்லரிற் குன்றி தேடிச் சூடிய தென்னே வென்றான்
மெல்லியகண்ணும் வாயும் புனைதத்தனன் வெண்முத் தென்றாள்.

அண்டரண்ட மிரண்டுமுண்ட வரங்கனையவ ளாதலால், அந்தலங்கையு மரக்கர்சேனையு மவன் வயிற்றினி லில்லையோ, தெண்டிரைக்கடல் சிகரமேருவுந் திருவயிற்றினி லில்லையோ, சீதையைச்சிறை வைத்ததாமென முனிவனெப்படி செப்பினான், குண்டுகுண்டென நின்றமந்திரியுங் குரங்குந் தன்னுடை சேனையுங், கூடியேபடை யேகினாரென வவனுமெப்படிக் கூறினான், கண்டதுண்டம தாக்குவேன்கவி சொன்னவன்றனைக் காணிலேன்; கம்பனோமிகு வம்பனோவவன் காளை குளைசுதனல்லவோ. (௫௧௬)

தையலில்லம் புகும்போதென் சுதன்குரலைக் கேட்டொடுங்கித் தாழ்வாரத்தில், பையவொன்றிச் செவிகொடுத்தேன் பாலனைப்பார்த் தக்கோதை பணமீயென்றாள், ஐயனிறந்திடிலெல்லா முனதென்று னவன்றாங்கு மமயம் பார்த்தோர், சையமெடுத் தவன்றலைமேற் போடுவாய் போடுமுன்னான் றழுவே னென்றாள். (௫௧௭)

மும்மதக் கரியீ ராறு மூரிவல் லியமு மேழு
செம்மையிற் றின்றேன்சிங்க மொன்றினைத் தின்னவேண்டி
நம்மனத் திச்சை கொண்டோ நண்ணினை வாவென்றோடி
விம்மலுற் றெழுலுஞ் சிங்கம் வெருண்டுசே ணோடிற்றன்றே()

உரமுடன் மொழிவார் வார்த்தை யுறுதியு மில்லை கண்டாய்
மரமதின் கீழே யாடும் வானவா னரத்தை மானும்
புரமதி னுமலி காலிற் பூட்டிய மணிபோ லாடும்
தரமிலான் மொழியும் வார்த்தை தங்கத்தின் கட்டிபோலாம்.

நம்பு நீர்த்துறை நல்லவர்க் கல்லவென்
றென்பு தூக்கி யிழுக்குவைத் தார்கள்போல்
பம்பு மேகலைப் பாவையர்க் கல்லவென்
றென்பு போல்வெளுத் தேகிய குஞ்சியே. (௫௨0)

நூதன கல்வி தன்னி னூலிடை யில்லா ளாகும்
மாதுசெய் யோக லீலை வகையைப்பார்த் தைய மாகக்
காதலன் றெளியத் தானக் களிற்றினைப் பிறக்கும் போதே
கோதறு சிங்கக் குட்டி கொன்றிடக் காட்டினாளே. (௫௨௧)

கொண்டநற் கலைக ளோடுங் குணமிலாக் கோதை மாரைக்
கண்டுகண் டிருப்ப தல்லாற் கனவிலும் புல்ல வொண்ணா
துண்டன மதுவை யுண்ண வோவியப் பூவில் வீழ்ந்த
வண்டினம் பட்ட பாடு மனிதரும் படுவர் தாமே. (௫௨௨)

ஆட்டு வாணிப னாலிங்க னத்திலும்
கூட்டு வாணிபன் கைக்குட்டு நன்றதா
மோட்டு மாதர் முயக்கிற் சரசமே
காட்டு மாதரைக் காணலு நல்லதே. (௫௨௩)

வில்லது வளைந்த தென்றும் வேழம துறங்கிற் றென்றும்
வல்லியம் பதுங்கிற் றென்றும் வளர் கடா பிந்திற் றென்றும்
புல்லர்தஞ் சொல்லுக் கஞ்சிப் பொறுத்தனர் பெரியோரென்றும்
நல்லதென் றிருக்க வேண்டா நஞ்செனக் கருதலாமே. (௫௨௪)

அருமையும் பெருமை தானு மறிந்துடன் படுவர் தம்மால்
இருமையு மொருமை யாகு மின்புறற் கேதுவுண்டாம்

பரிவிலாச் சகுனி போலப் பண்புகெட் டவர்க டம்பால்
ஒருமையி னிரய மெய்து மேதுவே யுயரு மன்னே. (௫௨௫)

விஞ்ஞைய ரருமை தன்னை விஞ்ஞைய ரறிய வேண்டும்
புன்செய லறிவி லீனர் புகழ்ந்ததை யறியா ரென்போல்
விஞ்சிய மகப்பெ றுளவ் வேதனை மலடி தானும்
கிஞ்சிற்று மறிந்தி டாள்போ லிருந்திடுங் கேள்விதானே. ()

சலந்தனிற் கிடக்கு மாமை சலத்தைவிட் டகன்றபோது
கொலைபுரி வேடன் கண்டு கூரையிற் கொண்டு செல்ல
வலுவின லவனை வெல்ல வகையொன்று மில்லை யென்றே
கலையெலி காகஞ் செய்த கதையென விளம்புவோமே. (௫௨௭)

கரியொரு திங்க ளாறு காளவன் மூன்று நாளும்
இருதலைப் புற்றி னாக மின்றுனு மிரையீ தென்று
விரிதலை வேடன் கையில் விற்குதை நரம்பைக்கவ்வி
நரியனார் பட்ட பாடு நாளைநாம் படவே போவோம். (௫௨அ)

மலையென்னும் வினைதீர மறுவற்ற புனல்மூழ்கி
அலைகின்ற முழுமூட ரறிவென்ன வறிவென்ன
புலையன்றன் மலமுண்ணு மெனையுண்ணும் புலையர்க்கு
குலமென்ன நலமென்ன கூகூவென் றெனகோழி. (௫௨௯)

மயில்குயில் செங்கா லன்னம் வண்டுகண் ணாடிபன்றி
அயிலெயிற் றரவு திங்க ளாதவ னாழி கொக்கோ
டெருமின்கீமலம்பன்மூன் றுறுகுண முடையோர் தம்மை
இயலுறு புவியோர் போற்று மீசனென்றெண்ணலாமே. ()

கம்பமதக் கடகளிற்றான் றில்லை வாழுங்
கணபதியின் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெலாம் விழித்திருந்தா ரயில்வேற் செங்கை
யுடையவறு முகவனுங்கண் ணீரா னான்
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண் டான்மால்
பயமடைந்தா னுமையுமுடற் பாதி யானாள்
அம்புவியைப் படைத்திடுவ தவம தேயென்
றயனுமன்ன மிறங்காம லலைகின் றானே. (௫௰௧)

தார்க்கொன்றைத் தாவென்றேன் றாவேழி லொன்றென்றான்
ஊர்க்கஞ்சி நான்மூன்றி லொன்றென்றேன் — யார்க்கும்
பொதுவென்றான் பூவென்றேன் போயினான் றோழி
இதுவோநம் மீச னியல்பு. (௫௰௨)

பகுதி தகுதி விகுதி யெனும் பாட்டில்
இகலி லிடையை யிரட்டித் — தகவின்
அருச்சித்தான் முன்னு மதுகடையாங் கண்டீர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து. (௫௰௩)

நாரியின் முடிமேல் வையமும் வைய நடுவினிற்சிலையு மச்சிலையிற், பாரிய வுருவு முருவினிற் கணையும் பகழியிற் பாகனும்பாகன், சீரியமுகத்திற் றுரங்கமுந் துரங்கச்சிகையினிற் றலைவனு மாகப், போரியலவுணர் புரஞ்செறு மாற்றல் புகலுறிற் புன்சிரிப்பாமால். (௫௰௪)

பொன்னகர் விட்டே கங்கா நதியிடை போந்தோ ரோதிமமும், புவியிற் புனலிடை வந்தது கண்டே புடைசூழ்ந் தே

பகழும், உன்னிரு துண்டங் கால்பவ ளம்போ லூற்றாயிதெ
ன்ன, வோதிம மும்மூரெவ்வூரெம்மூ ரும்பர்வ ளம்பதியாம்,
அந்நகர் தனிலே யேதுண் டதிசய மம்பொற் புட்பமுட,
னணியார் தரளம் பவளங் களுமுண் டதுமற் றல்லாதே,
இந்நகர் தனிலுள நந்தைக டாமங் கிலேயோ வஃதறியோ
மிஃதறியாமற் றெஃதறி வாயென் றேநகை செய்ததுவே. ()

ஒருபாதி மால்கொள மற்றொருபாதி யுமையவள்கொண்
டிருபாதி யாலு மிறந்தான் புராரி யிருநதியோ
பெருவா ரிதியிற் பிறைவானி னாகம் பிலக்குழியிற்
றருராச போசகொடைபுன்கை யோடென்கைதந்தனனே.

காலையிலும் வேலை கடையக் கயிறாகும்
மாலையிலும் பூமுடித்து வாழுமே—சோலையிலும்
செய்யிலா ரந்திகளுஞ் செந்துருத்தி மாநகர்வாழ்
பொய்யிலார் மெய்யிலிடும் பூண். (௫௱௭)

கரியொன்று பொன்மிகும் பையேறக்கற்றவர் சூழ்ந்துதொழ
எரியொன்று செல்வன் றலாத்தினி லேற விருண்டமஞ்சு
சொரிகின்ற நாகமின் சோற்றினிலேறித் தொடர்ந்துவர
நரியொன்று சொர்தக் கனலேறிவந்தது நங்களத்தே. (௫௱௮)

தேனுகர் வண்டு மதுதனை யுண்டு தியங்கியே கிடந்ததைக் கண்டு, தானதைச் சம்பு வின்கனியென்று தடக்கையா லெடுத்துமுன் பார்த்தாள், வானுறு மதியம் வந்ததென் றெண்ணி மலர்க்கரங் குவியுமென்றஞ்சிப், போனது

வண்டோ பறந்ததோ பழந்தான் புதுமையோ விதுவெனப் புகன்றாள். (ருகூ)

தம்புருவை வாசியென்று தாயுரைக்கக் கேட்டமகள்
அம்புருவக் கண்ணருவி யாறாகி—வம்பிபுரை
வீணையோ வென்றாள் விழைந்தம் பலத்தாடும்
பூணையே பூணாளிப் போது. (ருசய)

தகரவரிக் கூந்தலர்கா மாதிமுந்நீ ராடும்
தகரவரி நாலைந்து சாடும்—தகரவரி
மூவொற்றி யூர்பதங்கண் மூன்றுமங்கை யேந்துமொரு
சேவொற்றி யூரன்றாள் சேர்வு. (ருசக)

சலதாரை வீழ்நீருஞ் சாகரந் தன்னைச் சார்ந்தாற் [டோ
குலமென்றே கொள்வதல்லாற் குரைகடல் வெறுத்த துண்
புலவர்கள் சபையிற் கூறும் புன்கவி தன்னைச் சொல்ல
நலமென்றே கொள்வரல்லா னவில்வரோ பெரியோர்குற்றம்.

கடன் வாங்கிய புலவனைக் கண்டுகேட்க அப்புலவர் சொன்னது.

ஈடுகண்டு கடன்கொடுத்த விதந்தான் நீங்கள்
என்னகண்டு கடன்கொடுத்தீ ரெங்கள் வீட்டில்
மாடுகண்டோ வுடமை கண்டோ பயிர்செய்கண்டோ
வரவுகண்டோ யிவைகளெலா மறிந்து பட்ட
பாடுகண்டும் அலைச்சல்கண்டுந் தினமிக் கட்டுப்
படுதல் கண்டுங் குடியிருக்கும் பழையபீத்தல்
வீடுகண்டுங் கடன்கொடுத்தீ ரிழந்தீர் சொன்னால்
வெட்கமுமக் கித்தனையும் வேணுந் தானே. (ருசரு)

இதுவுமது.

கலப்பாலுஞ் சோறுமிடக் குடித்த பூனை
கக்கென்று வுழக்குப் பால்கக்குமோதான்

மலைப்பானேன் அடிக்கடிநீ கடன்தா வென்றும்
வட்டியென்றும் வாசியென்றும் வலிய வந்து
குலைப்பானேன் தெருவில்நின்று நாய்போல் நித்தங்
கூட்ட மிட்டு அம்பலத்திற் கூறுவானேன்
அலைப்பாமற் கடன்கொடுத்த பதரே போம்போம்
அல்ல வென்றால் மறியலிருந் தறியலாமே.

அள்ளிக்கொடுத்திடும் செம்பொன்னு மாடையு மாத
கொள்ளிக்கும் பட்டகடனுக்கும் என்னைக் குறித்தத
துள்ளித் திரிகின்ற நாளையிலே யென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே.

வஞ்சங் கவடு வயிரம் பகை நிறைந்த
நெஞ்சம் பொறாமை சன நெட்டூரம்—மிஞ்சிய
மாங்காரங் கோப மடங்காத் தன மனைத்தும்
பாங்காடாய்ப் போகுமே பாழ்த்து.

செந்தமி ழுடைகாய் நீறு சிவிகைபொன் னாரமாடை
சுந்தர மானதோகை துலங்குமிவ் வகைக ளேழும்
வந்தபோ திருகையேந்தி வாங்க லட்சுமியுஞ் சேர்வ
அந்தநா ளாகா தென்றால் அவனைவிட் டகலுவாளே.

படிப்பட்டு கூன்வளை வாட்பட்டு நார்க்கட்டுப் பட்டுல
கொடிப்பட்டு வாழ்ந்த புகையிலையே நற்கோதையர்
கடிப்பட்டிடாமலனற் பட்டு நெய்ப்பட்டு கந்தப்பட்டு
பொடிப்பட்டை சப்பட்டை மூக்குக்குத் தாளாய்ப் புறப்பட்

முன்பாட்டுடன் ௫௫௰ பாட்டு விவேகசிந்தாமணி
முற்றிற்று.